
ஹைக்கோர்ட்
அவதூறு வழக்கில்

பெரியார் ஸ்டேட்மெண்டும் தீர்ப்பும்

(ஆதாரங்களும், விபரங்களும்)



C.A.No. 3 of 1957. Dt. 23-4-57

விலை 25 புதுக்காசு

ஹைக்கோர்ட் அவதூறு வழக்கில்

பெரியார் ஸ்டேட்மெண்டும் தீர்ப்பும்

(ஆதரவுகளும், விபரங்களும்)

C. A. No. 3 of 1957. Dt. 23-4-57.

பெரியார் கோர்ட் அவமதிப்பு வழக்குக்கு ஆதாரமாக அட்வகேட் ஜெனரல் எடுத்துக் காட்டிய

(6-11-56) "விடுதலை" தலையங்கம்

"கோர்ட்டை அவமதிப்பதல்ல"

899 வது குறளை இங்கே தருகிறோம். மக்கள் கவனத்துக்காக மட்டுமல்ல. ஆட்சியாளரும் அறிவு பெறுவதற்காக.

"ஏந்திய கொள்கையார்சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்"

உயர்ந்த கொள்கையைக் கொண்ட பெரியார் சீறு வாராலேயே நாட்டை ஆள்கின்ற அரசன்கூட இடை நடுவே முரிந்து அரசு இழந்து கெட்டுப்போவான் - என் பது இதன் பொருள்.

அன்றைக்கு அரசனுக்காகக் கூறப்பட்டது இது. இன்றைக்கு அவன் பொறுப்பையேற்றுள்ள அமைச்சர் களுக்கும் பொருந்தும்

தமிழ் நாட்டுப் பெரியார் சாதாரணமாகச் சிற்றங் கொள்வதில்லை. இந்தியாவிலேயே இன்று சட்டத்துக் கும், அமைதிக்கும் மரியாதை தருகின்ற ஒரே தலைவர், பெரியார் ஈ. வெ. ரா, அவர்கள். 'ஆகஸ்ட் தியாகம்" என்ற காங்கிரஸ் 'தேசபக்தி' கிளர்ச்சிகளையே' காலித் தனம்' என்று கண்டிப்பவர். 'ஒரு போலீஸ் கான்ஸ்ட பிள் கட்டளையைக்கூட மீறக்கூடாது.' என்று தம் கழகத்தாருக்குக் கடுமையான கட்டளைவிதித்திருப்பவர்.

இப்போர்ப்பட்ட 'உயர்ந்த கொள்கையைக்கொண்ட' பெரியார் இனையசமுதாயக் கொடுமைகளிலிவற்றைக் கண்டு "சீறுகின்றார்" என்றால், ஆட்சியாளர் அலட்சியப்படுத்த முடியாது; அலட்சியப்படுத்த மாட்டார்கள் என்பது நமக்குத் தெரியும்.

4-ந் தேதி ஞாயிறு அன்று மாலைதிருச்சியில் வெள்ளம்போன்ற தமிழர்கள் கூட்டம் கூடியிருந்தது. பெரிய பெரிய அரசியல் பிரச்னைகளுக்குக்கூட இம்மாதிரிக் கூட்டம் கூடியதில்லை. ஒரு ஜில்லா அதிகாரியைப் பற்றிய ஒரு சாதாரணமரன பிரச்னைதான்; இதற்காகசுமார் அய்ம்பதாயிரம் மக்கள் இரவு 10 மணி வரையில் காத்திருந்து பெரியார் பேச்சைக் கேட்டுஆரவாரஞ் செய்தார்க ளென்றால், பொதுஜன உணர்ச்சி இன்று தமிழ்நாட்டில் எந்தஉச்சியை எட்டிப்பிடித்திருக்கிறதுஎன்பதைத்தான் கவனிக்க வேண்டும்.

இரண்டு அய்யங்கார் நீதிபதிகள் ஒரு தமிழர் கலெக்டரைப் பற்றி எல்லை மீறிய கடுஞ் சொற்களடங்கிய தீர்ப்பை வெளியிட்டிருக்கின்றனர் என்றும், மற்றொரு அய்யங்கார் அட்வகேட் ஜெனரல் கலெக்டர் சார்பில் வாதாட வேண்டிய கடமையைச் செய்யத் தவறிவிட்டாரென்றும், இன்னொரு அய்யங்கார் ஏடு ('இந்து') இத் தீர்ப்பை ஆதரித்துக் குதூகலப் பட்டிருக்கிறதென்றும், இது ஆரியர்-தமிழர் உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டதே தவிர நீதியையோ, சட்டத்தையோ, நிர்வாகத்தையோ அடிப்படையாகக் கொண்ட பிரச்னையல்ல வென்றும், சுமார் ஒன்றரை மணிநேரம் விளக்கிக் காட்டிப் பேசிய தலைவர் பெரியார் அவர்கள் இந்தியாவிலேயே (அல்லது உலகிலேயே?) எந்தத் தலைவரும் சொல்லத் துணியாத ஒரு உண்மையைச சொல்லியிருக்கிறார்.

உயர்நீதிமன்றத் தீர்ப்புகளைபற்றிப் பொதுமக்கள் கருத்துத் தெரிவிப்பது, கோர்ட்டை அவமானப்படுத்துவ தாகும் (Contempt of Court) என்ற பூச் சாண்டியை இனியாவது அம்பலப்படுத்தவேண்டும். உயர்நீதி மன்றத்து நீதிபதிகளும் மனிதப் பிறவிகளா தலால்; ஆசாபாசங்களுக்கும், சமுதாய உணர்ச்சிகளுக் கும், தவறுகளுக்கும், கட்டுப்பட்டவர்கள். இவர்களை நியமிக்கின்ற இந்தியத் தலைவரையும் அவருக்கு அடுத்த படியாக உள்ள இந்திய முதலமைச்சரையும், கண்டிக்க வும், கொடும்பாவி கட்டிக்கொளுத்தவும், இவர்கள் எல் லோருக்கும் மேம்பட்டதாகக் கூறப்படுகின்ற இந்திய அரசியல் சட்டம் என்பதையும், அதற்கும் மேம்பட்டதா கக் கூறப்படுகின்ற 'தேசியக் கொடி' என்பதையுமே கிழித்துப்போட்டுத் தீவைக்கவும், ஜனநாயக சமூகத்தில் உரிமையிருக்கும்போது, சாதாரண சர்க்கார் உத்யோகஸ் தர்களில் ஒருவரான நீதிபதியின் தீர்ப்பை தவறு என்று கண்டிப்பதற்கு மக்களுக்குஉரிமையிருக்கவேண்டாமா?-

என்ற கருத்துப்பட்டப்பேசினார், பெரியார் அவர்கள். 'இது சட்டப்படி குற்றமாகுமானால், அதன்விளைவு களையும் அநுபவித்தவேண்டியதுதான்'-என்று இடி முழக்கஞ் செய்தார்.

'நேசயற்கரிய செய்பவர்' அல்லவோ, பெரியவர்!

'தமிழர்:-தமிழர் கலாசாரம்; தமிழர் உரிமை; தமிழர் உத்யோகஸ்தர்-ஆகியவர்களின் வழக்குகளைப் பற்றி இனி ஆரிய நீதிபதிகள் விசாரணை செய்தல் கூடாது என்ற முடிவு ஏற்படவேண்டும்', என்று அழுத்தந்திருத் தமாகக்கூறினார். முற்றிலும் புதிய கருத்து. நியாயமான கருத்துங்கூட. ஆரிய-திராவிட இன உணர்ச்சி அசைக்க முடியாமல் வேரூன்றி விட்டபிறகு, இனி மறைத்துப் பேசி மழுப்புவானேன்?

"நியாயமற்றமுறையில் தீர்ப்பளித்த இரு அய்யங்கார் நீதிபதிகளையும் உடனே தமிழ் நாட்டை விட்டே மாற்றிவிடவேண்டும்; கடமையைச் செய்யத்தவறிய அட்வகேட் ஜெனரல் அய்யங்கார் மீது சங்கர் தக்க நடவடிக்கை யெடுக்கவேண்டும்."

என்ற தீர்மானம் வோட்டுக்கு விடப்பட்டது; 40,000 கைகள் ஈட்டிபோல் வான்நோக்கி உயர்ந்தன! 'இத்தீர்மானத்தை எதிர்ப்பவர் உண்டா? கை தூக்குங்கள்' என்று கேட்டார், அவைத்தலைவர். திரு. பழனியாண்டி எம். எல். ஏ. ஒருகை கூட உயரவில்லை. இது சர்க்கார் சுருக்கெழுத்தாளருக்கு மட்டுமல்ல; மாற்றுடையில் வந்திருந்த நூற்றுக்கணக்கான இரகசிய போலீசாருக்கும் தெரியும். (இவர்கள் கூடக் கையை உயர்த்தியிருக்கவேண்டும்! ஏனெனில், கையை உயர்த்தாத மனிதரே காணப்படவில்லை, அந்த மாபெரும் மக்கள் கடலில்!) எனவே, ஒரே கோடியில் '40,000 குற்ற வாளிகளை' உண்டாக்கினார், பெரியார்.

கூட்டத்தின் இறுதியில் 'இந்து' ஏட்டுக்கு அவைத் தலைவராலும், பெரியாராலும் தீவைக்கப்பட்டது. 'ஆரியனே வெளியேறு! ஆரிய ஏடுகளை வாங்கமாட்டோம்!'—என்ற இடிமுழக்கம் 40,000 வாய்களிலிருந்தும் பீறிட்டுக்கொண்டு கிளம்பியது.

ஆம்! ஆரிய இனத்தையே வெளியேறச் சொல்லும் போது, இரண்டு ஆரிய நீதிபதிகளை மாற்றச்சொல்வதும், ஒரு ஆரிய ஏட்டுக்கு (காங்கிரசுக்கு) தீ வைட்டுவதும் அற்பத்திலும் அற்பமான சொத்தை நிகழ்ச்சிகள் தானே!

திருச்சியில் நடந்தது போன்று சென்னைக் கடற் கரையிலும் இதற்காக ஒரு மாபெரும் கூட்டம் நடத்த வேண்டுமென்று தலைவர் பெரியார் அவர்கள் கருதியுள் ளார்கள். அதற்குப்பிறகு இதே பிரச்னைக்காக ஒவ் வொரு மாவட்டத் தலைநகரிலும் தீபித்த் தீர்ப்பு அதி ருப்திக் கூட்டங்கள் நடைபெற ஏற்பாடாகி வருவதாகத் தெரிகிறது.

எனவே, இது கோர்ட்டை அவமதிப்பதல்ல என்பது நம்கருத்து. இது சர்வ சாதாரணமாக மனிதஉரிமைதான். தனிப்பட்டவரின் லாப—நஷ்டங்களில், சுயநலமான காரி யங்களில்—கோர்ட் தீர்ப்புக்கு தலைசிறந்த மரியாதையும் கீழ்ப்படிதலும் காட்டவேண்டியது மிக மிக முக்கியந் தான், ஆனால் இதுபோன்ற பொதுநலப் பிரச்னைகளில் கோர்ட்டாரின் தீர்ப்பைக் கண்டிப்பதற்கும் மக்களுக்கும் பத்திரிகைகளுக்கும் உரிமையிருக்க வேண்டாமா ?

இந்த உரிமைக்கு விதையூன்றிய தலைவர் பெரியார் அவர்கட்கு நன்றி செலுத்திக்கொள்கிறோம்,

அடுத்த ஆண்டுக்குள் 'ரிட்டயர்' ஆகப்போகிற திருச்சி கலெக்டரை ஆட்சியாளர் எதுவும் செய்துவிட முடியாது ; எதுசெய்தாலும் அவர் சம்பளத்தையோ, பெருமையையோ, நேர்மையையோ, அவர்பாலுள்ள பொதுஜன அன்பையோ மயிரிழைகூட அசைக்க முடி யாது. ஆதலால் அவரைப்பற்றியதல்ல, இந்தப் பிரச்னை. ஆரிய நீதிபதிகளின் எல்லைக்கு மீறிய தீர்ப்புக் கருத்து வாக்கியங்களைப் பற்றியதேயாகும் இந்தப் பிரச்னை.

இனி, என்ன நடக்கிறதென்று பார்ப்போம் ! எதற் கும் தயாராயிருக்கிறார்கள், லட்சக்கணக்கான தமிழர்கள்! இராமன் படத்தை வெறுங்குப்பைத் தொட்டிக் கடுதாசி

என்றும், பிள்ளையார் உருவத்தை வெறும் களிமண் என்றும் கருதித் தீ வைத்தும், உடைத்தும் காட்டிய தமிழ்ப் பெருமக்கள் 'கோர்ட் அவமதிப்பு' என்ற பூச் சாண்டிக்கு அஞ்சி உண்மையை எடுத்துக்கூறத் தயங்கு வார்களா என்று அதிகாரவர்க்கம் சிந்தித்துப் பார்க் கட்டும்.

கே. சிவசாமியின் அஃபிடவிட்

பெரியார் கோர்ட் அவமதிப்பு வழக்குக்கு ஆதாரம்

பெரியார் அவர்கள் மீதும் திருமதி ஈ. வெ. ரா. மணியம்மை அவர்கள் மீதும் சென்னை உயர்நீதி மன்றத்தில் அட்வகேட் ஜெனரல் திரு. திருவேங்கடாச்சாரி அவர்களால் தொடுக்கப்பட்ட கோர்ட் அவமதிப்பு வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட முதலாவது அஃபிடவிட் (ஆதாரம்) :-

சென்னை-1. பாரிஷ் வெங்கடாசல அய்யர் தெரு நெம்பர் 9 இல்லத்தில் வசிக்கும் டி. குமாராசாமி முதலியார் மகன் கே. சிவசாமி ஆகிய நான் உண்மையாகவும் உறுதியாகவும் சொல்லுவது யாதெனில்,

1. சென்னை அய்க்கோர்ட் சர்க்கார் வக்கீல் ஆஃபீசில் நான் மானேஜராக இருந்துவருகிறேன்.

2. இந்த இரண்டாவது எதிர்மனுதாரர், சென்னை சிந்தாதிரிப்பேட்டை பாலகிருஷ்ண பிள்ளை தெரு 2-ம் நெம்பர் இல்லத்தை அலுவலமாகக்கொண்ட எம். 4789 ரிஜிஸ்தர் நெம்பருள்ள 'விடுதலை' தினசரி பத்திரிகையின் ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவருமாவார் சென்னை 6—11—56 (செவ்வாய்) இதழ் எண் 154

மலர் 18, வெளியூர் 7—11—56 (புதன்) இதழில் இரண்டாவது எதிர் மனுதாரர் 'கோர்ட்டை அவமதிப்பதல்ல" என்ற தலைப்பில் 2ம் பக்கத்தில் ஒரு தலையங்கம் வெளியிட்டிருக்கிறார். இதன் நகல் இதழ் இத்துடன்-எக்சிபிட் ஏ-எனக் குறித்து இணைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டுரையில் திருச்சி கலெக்டர் பிறப்பித்த சில உத்தரவுகளின் மீது இந்த உயர்நீதி மன்றத்தின் இரு உயர்நீதி பதிகள் அளித்த தீர்ப்பில் கண்ட சில குறிப்புக்களை முதல் எதிர்மனுதாரர். திருச்சியில் 4-11-56 இரவு நடந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் பகிரங்கமாகக் கண்டித்துப்பேசியதாகக் குறிப்பிடப் பட் டு ள் ள து. இது 24—10—56ந்தேதி ரிட்மனு 568/55ன் மீது அளிக்கப் பட்ட தீர்ப்பைப் பற்றியாகும். அந்த ரிட் மனுக்களின் மீது இந்த கோர்ட்டின் உயர் நீதிபதிகளை நேரடியாகக் குறித்துத் தாக்கி முதல் மனுதாரர் பேசியிருப்பதாகக் காணப்படுகிறது.

இரண்டாவது எதிர் மனுதாரர் தொகுதி வெளியிட்ட கட்டுரையானது முதல் எதிர் மனுதாரர் பேசியதன் கருத்தைத் திரும்பப் பதிப்பித்தும், முதல் எதிர் மனுதாரரின் கண்டனங்களை ஆதரிக்கும் முறையிலும் இருக்கிறது. அந்த "விடுதலை" இதழின் தலையங்கக் கட்டுரை, முதல் எதிர் மனுதாரர் பேச்சின் அடிப்படையைக்கொண்டு இருப்பதால் முதல் எதிர் மனுதாரரின் பேச்சுக்காக அவரையும் இந்த மனுவில் எதிர் : மனுதாரராகச் சேர்க்கப்பட்டிருக்கிறது,

3. முதல் எதிர் மனுதாரரின் பேச்சும், இரண்டாவது எதிர்மனுதாரர் வெளியிட்ட அந்தக் கட்டுரையும் இந்த உயர்நீதி மன்றத்தின் கவுரவத்தைக்குறைப்பதற்கான நோக்கத்துடன் செய்ததாகவும், நீதியின்போக்கைப் பாதிக்கும் நோக்கத்துடன் இருப்பதாகவும், இந்த கோர்ட்டின் நீதிநிர்வாகத்துக்குக் கெட்டபெயர் உண்

டாக்கும் நோக்கத்துடன் இருப்பதாகவும் உள்ளது. ஆகவே இந்த கோர்ட்டை அவமதிப்பதாகும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. ஆகவே இந்த எதிர் மனுதாரர்கள் மீது, கோர்ட்டாரின் விருப்பப்படி நீதியைக்காப்பாற்றும் பொருட்டு கோர்ட்டார் தகுதியெனக்கருதும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது நியாயமானதாகும்.

(ஒப்பம்) கே. சிவசாமி

அய்க்கோர்ட் வழக்கு விசாரணையும் தீர்ப்பும்

பெரியார் அவர்கள் மீது சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட 'கோர்ட் அவமதிப்பு' வழக்கில் 23—4—57 காலை பெரியார் அவர்கள் தமது ஸ்டேட்மெண்டை அளிக்கப்போகிறார்கள் என்பதையறிந்த கழகத் தோழர்களும் பொதுமக்களும் ஆயிரக்கணக்கில் காலை 10 மணியிலிருந்தே நீதிமன்றகட்டிடத்தில்கூட ஆரம்பித்து விட்டார்கள். கூட்டத்தை சமாளிப்பதற்காக பலத்த போலீசு பாதுகாப்பு செய்யப்பட்டிருந்தது.

பெரியார் அவர்கள் சரியாக காலை10-30க்கெல்லாம் நீதிமன்றத்திற்கு திருமதி ஈ. வெ. ரா. மணியம்மை அவர்களுடன் வந்துவிட்டார்கள்என்றுமில்லாதஅளவு500க்கு மேற்பட்டவக்கீல்கள் பெரியார் அவர்கள் ஸ்டேட்மெண்ட் வாசிப்பதைக் கேட்பதற்காகக் கோர்ட்டில் குழுமி இருந்தனர் பலர் பெரியார் அவர்களுடன் அளவளாவி நின்றனர்.

பெரியார் அவர்களுக்கு உட்காருவதற்கு இருக்கை யளிக்கப்பட்டது. நீதிபதிகள் பிரதம நீதிபதி திரு பி. வி ராஜமன்னார் அவர்களும் நீதிபதி திரு. ஏ. எஸ் பி, அய்யர் அவர்களும் தங்களது இருக்கைகளில் அமர்ந்து சிறிது நேரம் கழிந்ததும், பெரியார் மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது,

பிரதமநீதிபதி ஸ்டேட்மெண்ட் கொண்டுவந்தீர் களா? எனக்கேட்கவும், பெரியார் அவர்கள் இரு நீதிபதி

களிடத்தும் தயாராக வைத்திருந்த ஸ்டேட்மெண்டை அளித்தார் பிறகு நீதிபதி அவர்கள் பெரியார் அவர்களைப் பார்த்து "ஸ்டேட்மெண்டைப் படிக்கிறீர்களா?" என்று கேட்டார் அதற்கு பெரியார் அவர்கள் கோர்ட்டார் அனுமதிகொடுத்தால் படிக்கிறேன் என்றார் அதன்மேல்

நீதிபதி ஏ. எஸ். பி அய்யர் அவர்கள் படித்துக்காட்டும்படி கேட்கவும் பெரியார் அவர்கள் தமது நீண்ட ஸ்டேட்மெண்டை, 'கிரவுன் சைஸ்' 30 பக்கங்கள் கொண்ட ஸ்டேட்மெண்டைபடித்தார்கள். இதற்குஒரு மணிநேரம் ஆயிற்று படித்து முடித்ததும்,

கோர்ட்டின் அருமையான நேரத்தை இவ்வளவு தூரம் வீணாக்கியதற்கு வருந்துவதாகவும் அதற்காக மன்னிக்குமாறும் கோர்ட்டாரைக் கேட்டுக்கொண்டார். தாம் இவ்வளவு காலமாகச் செய்துவந்த பிரச்சாரம் கொள்கையின் அடிப்படையில் இந்த வழக்கு எழுந்திருப்பதாலும் தனக்கும் வயதாகிவிட்டதாலும் தனக்குப் பின்னால் வருபவர்கள் இந்த லட்சியத்தை ஏற்று பின் பற்றவேண்டும் என்பதற்காகவும் மேம இவ்வளவு நீளமான ஸ்டேட்மெண்டை தாக்கல்செய்து வாசிக்கவேண்டிய தாயிற்று என்றும் கூறினார்.

அட்வகேட்ஜனரல் திருவேங்கடாச்சாரியார் அவர்கள் எழுந்து தனது வாதத்தை தொடர்ந்தார். அது போழ்து 6-11—56 விடுதலை தலையங்கத்திலிருந்து சிலபகுதிகளைப் படித்துக்காண்பித்து இப்பகுதிகளே கோர்ட்டு அவதூறு வழக்கிற்கு அடிப்படையாய் உள்ளது என்று கூறி அப்பகுதிகளைக் கோர்ட்டாரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். அசெம்பிளியில். திரு. ரெங்கசாமி ரெட்டியார் பேசிய பேச்சை, பெரியார்அவர்கள் தனக்கு ஆதாரமாகக் கொண்டது, இவ்வழக்கிற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லையென்றும், பிரதம

நீதிபதி ஒரு புத்தகத்தில் முன்னுரையாக எழுதியிருந்த பகுதியை பெரியார் அவர்கள் எடுத்துக் கூறியதை, தவறாக பெரியார் அவர்கள் தனக்கு ஆதாரமாகக் கூறிக் கொண்டதாகும் என்றும் வாதித்தார்.

பிறகு. இன்னும் ஏதாவது சொல்லவேண்டியிருக்கிறதா? என்று இரண்டு நீதிபதிகளும் பெரியார் அவர்களைக் கேட்டார்கள்.

'இல்லை' என்று இரண்டு எதிர்மனுதாரர்களும்- பெரியார் அவர்களும், மணியம்மையவர்களும்—பதிலளித்தார்கள். அதன் பின் பிரதமநீதிபதி தனது தீர்ப்பை வாசித்தார்.

தீர்ப்பு

'விடுதலை' 6—11—56 தலையங்கத்தில் ஆரியர் திராவிடர் உணர்ச்சிபற்றி எழுதப்பட்டிருக்கும் பகுதியையும் ஸ்டேட்மெண்டில் ஆரியர்—திராவிடர் பிரச்னைப்பற்றி குறிப்பிட்டிருப்பதையும் நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் எடுத்துக் காட்டிவிட்டு தனிப்பட்ட முறையில் அந்த நீதிபதிகள் மீது ஒன்றும் சொல்லவில்லையென்றாலும் அவர்களைச் சொன்னது 'பொதுவாக கோர்ட்டையே சொன்னதாகுமென்று, கருதி பெரியார் மீது கண்டெம்ட் ஆஃப் கோர்ட் குற்றம் ஏற்படுகிறதாகக் கொண்டு அவருடைய முதிர்ந்த வயதைக்கருதி ரூ.100 அபராதம் விதித்தால் போதும் என்று தீர்ப்பளித்தார்கள்,

திருமதி மணியம்மை அவர்கள் இந்த தலையங்கத்தை எழுதியிருக்கமாட்டார்கள் என்று அட்வகேட் ஜெனரல் எடுத்துக்காட்டியபடியால் அவர்கள் இனிமேல் இம்மாதிரி எழுதக் கூடாதென்று எச்சரிக்கை செய்து விடப்பட்டார்கள்.

பெரியார் அவர்கள் நீதிபதியவர்களுக்கு வணக்கம் செலுத்திவிட்டு வெளியேவந்து காரிலேறும்போது கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களும் 'பெரியார் வாழ்க!' என முழங்கினர்,

In the High Court of Judicature at Madras.

Contempt application No. 3 of 1957

The Advocate General
Madras :: Applicant

Vs

E. V. Ramaswami
and another :: Respondent

1-வது எதிர்மனுதார் தாக்கல் செய்த ஸ்டேட்மெண்ட்

மேன்மைதங்கிய கனம் நீதிபதிகள் அவர்களே !

1. சமூகம் கோர்ட்டார் எனக்கு அனுப்பி யிருக்கும் நோட்டீசில், சமூகம் கோர்ட்டை அவமதித்த தாகவும், அதற்கு ஏன் நான தண்டிக்கப்படக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டவேண்டுமென்றும் கோரப் பட்டிருக்கிறது. மேலும் ஒரு சிவசாமி முதலியார் என்ப வரால் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லி எனக் குக் கொடுக்கப்பட்டிருக்கும் பிரமாணப் பத்திரிகையில் (Writ Petition) ரிட் பெடிஷன் நெம்பர் 568/55-ல் சமூகம் கோர்ட்டு தீர்ப்பில், கனம் திருச்சி ஜில்லா கலெக் டரைப் பற்றி சொல்லப்பட்டிருப்பவளைக் குறித்து,

திருச்சி பொதுக்கூட்டத்தில், நான் 4-11-56 ம் தேதியில் மேற்படி தீர்ப்பைச் சொன்ன கனம்நீதிபதிகளைக்குறை கூறியிருப்பதாகவும் (criticise) அந்த நீதிபதிகளைத் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசியிருப்பதாகவும், அவர்களுக்கு உள்ளெண்ணம் (Motive) கற்பித்துத் தாக்கியிருப்பதாகவும், அதனால் சமூகம் கோர்ட்டின்கவு ரவம் வெகுவாகப் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் சமூ கம் கோர்ட்டு நீதிபரிபாலனத்திற்கு இடையூறு விளை விப்பதாகவும், இருக்கிறதென்றெல்லாம் கண்டிருக்கிறது

2. இந்தக் குற்றச்சாட்டு வார்த்தைகளில், நேரிடை யான பொருளுக்கு ஏற்றமாதிரி நான் யாதொரு குற்ற மும் செய்தவனல்ல. பொதுவாக, மனித சுபாவத்தை பற் றியும், நீண்ட காலமாக அது பிரதிபலித்து வருவதைப் பற்றியுமே எடுத்துச்சொல்லி அதற்குப்பரிகாரம்தேடவே முயற்சித்து இருக்கிறேன், உதாரணமாக பிரஸ்தாபத் தீர்ப்பில் (Writ Petition) ரிட் பெடிஷன் நெம்பர் 568/55 - தீர்ப்பில் பாதிக்கப்பட்டிருப்பவர் ஒரு பிராவி டர். அதிலும் தமிழர் (Non-Brahmin) தீர்ப்புக் கொடுத்திருக்கிறவர்கள் பிராமணர்கள் என்று சொல்லப் படுகிற பார்ப்பனர்கள், இந்தத்தீர்ப்பின்மீதுஎன்னுடைய ஆராய்ச்சிக்கு எட்டிய கருத்து பாதிக்கப்பட்டவர் பார்ப் பனரல்லாதாராய் இருப்பதாலும், தீர்ப்புக் கூறினவர்கள் பார்ப்பனர்களாய் இருப்பதாலும், இம்மாதிரி ஏற்பட்டது என்பது எனது தாழ்மையான முடிவு. இதில் முற்கூறப் பட்டவர் பார்ப்பனர் அல்லாதார்என்பதையும், பின்கூறப் பட்டவர்கள் பார்ப்பனர்கள் என்பதையும், கனம்கோர்ட் டார் அவர்கள் மறுக்க முடியாத உண்மை என்றும் இரு தரப்பார்களும் இந்துக்கள் என்பதையும் மறுக்க முடி யாத உண்மை என்றும் கருதுகிறேன்.

3. பார்ப்பனர் என்பது, இந்து மதத்தின்படி வேத சாஸ்திர புராண இதிகாசங்களின்தன்மையைப் பொறுத

தது. சம்பந்தப்பட்ட கனம் பார்ப்பன நீதிபதிகள் இரு வரும் அந்த வேதசாஸ்திர இதிகாச புராணங்களின் தன்மைப்படி பார்ப்பனர்களாக இருப்பதோடு, அவர் களது வாழ்விலும், தொழிலிலும், நடத்தையிலும் மத, வேத, சாஸ்திர, இதிகாசபுராண தத்துவங்களுக்கு மாறு பாடாக நடக்கக்கூடாது என்ற உறுதி உடையவர்கள். இவர்கள் மாத்திரம் அல்ல. இந்த நாட்டிலே தங்களைப் பார்ப்பனர்கள் (பிராமணர்கள்) என்று சொல்லிக் கொள் ளுகிற, கருதுகிற, எவரும் இந்தத் தன்மைக்கு மாறாக நடந்துகொள்வதாகக் கூறினால் அது இயற்கைக்கும் உண்மைக்கும் மாறானதாகும். அதே வேத சாஸ்திர புராண இதிகாசங்களின்படி பார்ப்பனர் உயர்ந்த ஜாதி, மற்றவர்கள், குறிப்பாக இந்தப் புகார் சம்பந்தப்பட்ட தீர்ப்பினால் பாதிக்கப்பட்டிருப்பவர் 'தாழ்ந்த' ஜாதியாளர் ஆவார்கள். 'உயர்ந்த' ஜாதிக்கும் 'தாழ்ந்த' ஜாதிக் கும் மநுதர்மம் முதலிய இந்து சாஸ்திர புராண — இதிகாசங் களில், பொய் மேல்மேல் பேதமும் பெருத்த இழிவும் பெருமையும் கற்பிக்கப்பட்டு இருக்கின்றன. அதை விட்டுவிடுவது என்பது எந்தப் பார்ப்பனனாலும் முடி யாததும் ஜனம் பப்படாதது மான காரிய மாகும். மற்றும் மேல் ஜாதிக்காரன் என்கிற பார்ப்பா னுக்கு இந்த ஜாதி உணர்ச்சியை விடாமல் எந்தத் துறை யிலும் காட்டிக்கொள்வதனால், மேன்மையும் நல்வாழ் வும் லாபமும் இருந்துவருகின்றன. அதை இழக்க எந்தப் பார்ப்பனும் சமமதிப்பான் என்று நம்புவது இயற் கைக்கு விரோதமானதாகும். ஆனதனால் இந்தப் பிரச் னையில் நான் பேசியிருப்பது சம்பந்தப்பட்ட இந்த இரண்டு கனம் நீதிபதிகளையும் தனிப்பட்டமுறையில் குறித்து அல்ல என்பதையும், பார்ப்பனர்கள் எல்லோரை யுமே கருத்தில் வைத்து அவர்களுடைய சுபாவத்தை நினைத்து இதற்குப் பரிகாரம் தேடவேண்டுமென்கிற கருத்திலேயே நான் பேசியிருக்கிறேன்.

4. மநுதர்ம சாஸ்திரத்தின்படி ஒரு பார்ப்பனரல்லாதவன் [சூத்திரன்] ஒரு நாட்டிலே (பார்ப்பனர்களும் வாழும் நாட்டிலே) நீதிபதியாகவோ, நிர்வாக அதிகாரியாகவோ, அமைச்சராகவோ, அரசனாகவோ, உயர்பதவியாளனாகவோ இருக்கக்கூடாது என்பது தர்மமாகும் அப்படியிருக்கவிடக்கூடாது என்பதும் பார்ப்பனர் தர்மமாகும். இந்த மநு தர்மந்தான் நீதிபதிகள் கையாளும் இந்துச் சட்டத்துக்கு மூலாதாரமாகும். இதற்கு உதாரணங்கள் அதிகம் கனம் கோர்ட்டார் அவர்களுக்குக் காட்ட வேண்டியதில்லை என்றே கருதுகிறேன். ஒரு உதாரணம்; காட்ட வேண்டுமானால் சென்னை அய்க் கோர்ட்டு ஏற்பட்டு சுமார் நூறு வருடங்கள் ஆகியும் சமீபத்திய 10—15 ஆண்டுகளில்தான் அதாவது —பார்ப்பன துவேஷம் என்று சொல்லப்படக்கூடிய சாதிப்புரட்சியும், பார்ப்பனர்கள் நடத்தையை வெளிப்படையாகக் கண்டித்தல், என்ற தன்மையும் சர்வ சாதாரணமாக நாட்டில் ஏற்பட்ட பிறகுதான் பார்ப்பனரல்லாதவர்களில் ஒருவர் இருவர் உயர்நீதிமன்ற நீதிபதிகளாகத் தோன்ற முடிந்தது, ஆகையினால்தான் பார்ப்பனர்கள் எந்தப் பதவியிலிருந்தாலும், அவர்களுடைய நடத்தையில் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம்; பார்ப்பனரல்லாதவர்களை ஒழித்துக்கட்டுவதில், தலையெடுக்கவிடாமல் செய்வதில், சரியாகவோ, தப்பாகவோ, காலாகாலம் பாராமல் தங்கள் முயற்சிகளைச்செய்து கொண்டுதான் வருவார்கள். இப்படி இவர்கள் நீண்ட நாட்களாக செய்துவருகிறார்கள் என்பதற்கு ஏராளமான உதாரணங்கள் எடுத்துக்காட்ட முடியும். பின்னாலே தருகிறேன்.

5. பிரஸ்தாப வழக்கில் சம்பந்தப்பட்ட கலெக்டருடைய [பார்ப்பனரல்லாதார்] உத்தரவு சரியானதென்று வாதாட நான் முன் வரவில்லை. அவரைப்பற்றி எனக்கு

ஒன்றும் தெரியவும் தெரியாது. எங்களுக்குள் அறிமுக மாகும் அளவுக்குக்கூட சந்திப்பு ஏற்பட்டதுமில்லை. இதை உறுதியாகச் சொல்லுகிறேன். அதுபோலவே, (பார்ப்பனர்களான்) கனம் இரு ஜட்ஜுகளையும் நான் சந்தித்ததே கிடையாது. எனக்கு அறிமுகமும் இல்லை. என்னால் அவர்களை அடையாளம் காட்டவும் முடி யாது. வெளியிலே சொல்லுவார்கள் கலெக்டரைப்பற்றி, நேர்மையும் நாணயமும் உள்ளவர் என்றும், சம்பந்தப் பட்ட கனம் ஜட்ஜுகளை, தமிழர்களின் நல்வாழ்வு விஷயத்தில், விஷம் உள்ள பார்ப்பனர்கள் என்றும் பேசிக்கொள்வார்கள். நான் பேசியதாகச் சொல்லப்படும் பேச்சில் இந்த இரு தரப்பினர்களைப்பற்றியும் தனிப் பட்ட முறையில் இந்த குணங்களைச் சம்பந்தப்படுத் தியோ மனதில் வைத்தோ நான் ஒரு பேச்சும் பேச முற் படவில்லை. தனிப்பட்ட முறையில் இவர்களைப்பற்றி எனக்கு எந்த விதமான விருப்போ, வெறுப்போ கிடை யாது. ஆனால் தீர்ப்பைப்பற்றி பத்திரிக்கையில் படித்த தும், அதைப்பற்றி பார்ப்பனப் பத்திரிக்கையான 'இந்து' பத்திரிக்கை எழுதிய தலையங்கத்தைப் படித்ததும், தமிழ் மக்கள் இதைக்கேட்டுப் பதறின பதட்டத்தையும், காட் டின பரிதாபத்தையும், பார்த்த பிறகு எனக்குத் திடீ ரென்று ஒரு எண்ணம் தோன்றிற்று. 'ஆஹா! இந்த கலெக்டர் ஒரு பார்ப்பனராய் இருந்திருந்தால், கனம் பார்ப்பன ஜட்ஜுகள் இப்படி எழுதியிருப்பார்களா? அல்லது ஜட்ஜுகள் இருவரும் பார்ப்பனரல்லாதவர் களாய் இருந்திருந்தால் இவ்வாறு கலெக்டரை அனாவசிய மாகத் தாக்கி எழுதியிருப்பார்களா?' என்ற எண்ணமும் தோன்றிற்று. அதாவது—கலெக்டர் உத்திரவு (15-7-55) தவறானது என்று கனம் ஜட்ஜுகள் கண்டுபிடித்த கருத்தைப்பற்றியல்ல நான் சொல்லுவது. மற்ற எதைப் பற்றி சொன்றால் 'இந்த ராஜ்யத்தில் எந்த இடத்திலும், சட்டம், அமைதி (Law and order) இவைகளைப் பாதுகாக்க எந்த வேலையை நிர்வகிக்க இப்போப்பட்ட

எதேச்சாதிகார நோக்கம் கொண்டவரும், சட்டத்தை மதிக்காதவருமான உத்தியோகஸ்தரிடம் மேலும்சர்க்கார் ஒப்படைக்கக்கூடாது' என்ற கருத்தைக்காட்டி எழுதியிருப்பது, தீர்ப்புக்கூறியிருப்பது பெருத்த அநியாயம் என்கிற ஆத்திரம் எனக்கு ஏற்பட்டது. அந்த வாக்கியம் ஆங்கிலத்தில் உள்ளபடி,

"It is for the Government to consider and consider seriously whether an officer of such totalitarian views and disregard of law should continue to be entrusted with the duties of maintaining law and order in any locality in this State"

6. மேலும் இந்த பிரஸ்தாப தீர்ப்பு சம்பந்தப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் பார்ப்பனர்களாகவே, அதுவும் பெரிதும் அய்யங்கார்களாகவே இருந்திருக்கின்றார்கள். அதாவது; ரிட்மனுதாரருக்கு ஆஜராகி இதுசம்பந்தமாக எல்லா நடவடிக்கைகளையும் நடத்தியவர் திரு. அண்ணாதுரை அய்யங்கார் என்ற பார்ப்பனர். சர்க்காருக்கு சகல விதமான சட்டப்பிரச்னைகளிலும் தக்க ஆலோசனை சொல்லக்கூடிய பெரிய வக்கீல் அதாவது: அட்வகேட் ஜெனரல் திரு. திருவேங்டாச்சாரியார் என்னும் பார்ப்பனர். கலெக்டருக்காக சமூகம் கோர்ட்டில் வாதாட நியமனம் செய்யப்பட்டவர் திரு. ராகவன் அய்யங்கார் என்கிற ஒரு பார்ப்பனர். தீர்ப்பை அளவுகடந்து ஆதரித்து, சர்க்காருக்கு கலெக்டர் மீது ஆத்திரம் ஏற்படும்படியும் தீர்ப்பை அமலுக்குக் கொண்டு வரும்படியும் 'இந்து' பத்திரிக்கையில் தலையங்கம் எழுதியவரும் ஒரு அய்யங்கார் பார்ப்பனர் என்று தெரிகிறபோது இயல்பாகவே பார்ப்பனர்களின்

சுபாவத்தை ஊறுதிப்படுத்துவதோடு, எடுத்துச் செல்ல வேண்டிய அவசியமும் ஏற்பட்டுவிட்டது. மற்றும் இவ்வளவு பார்ப்பனர்கள் ஒன்று சேர்ந்து சதியாலோசனை செய்ததுபோல், கலெக்டர்மீது இவ்வளவு பெரிய, அதாவது கலெக்டருக்கு வாழ்க்கைக்கே ஆபத்து ஏற்படும்படியான கடுமையான குறிப்பு எழுதித்தீரவேண்டிய அவசியத்திற்கு ஏற்றதாக இருக்கத்தகுந்த அளவுக்கு கலெக்டர் செய்த பெரிய தப்பு என்ன என்பது இங்கு சிந்திக்கத் தக்கது. மேலும், குதிரை வண்டிக்காரர் முதலியவர்களிடமெல்லாம் அரை ரூபாய், ஒரு ரூபாய், என்று லஞ்சம்வாங்கியதாகக் குற்றம் சாட்டி ருசுப்பிக்கப்பட்ட சப் கலெக்டர், ஜாயின்ட் மாஜிஸ்ட்ரேட்டாக இருந்த திரு. டி. எஸ்.சுவாமிநாதன் என்ற அய் ஸி.எஸ்.. பார்ப்பன அதிகாரியைப்பற்றியும், துணி,மணி,உயர்ந்தரக சாராயம் மது வகைகளை லஞ்சமாக வாங்கிக்கொண்டு பல ஊழல்களைப்புரிந்த எஸ். ஏ. வெங்கட்ராமன் என்ற அய். ஸி. எஸ். பார்ப்பன அதிகாரியைப்பற்றியும், ரசாயன ரர ஊழல் வழக்கில் சப்பந்தப்பட்ட எஸ் ஒய் கிருஷ்ணசாமி என்ற மற்றோர் பார்ப்பன அதிகாரியைப் பற்றியும் இன்னோரன்ன பல பார்ப்பன அதிகாரிகளைப் பற்றியும் குற்றம்சாட்டப்பட்டு கோர்ட்டுகள் முன்னால் கொண்டு வரப்பட்ட பார்ப்பன அதிகாரிகளில், யாரைப்பற்றியாவது திருச்சி கலெக்டரைப் பற்றிய தீர்ப்பில் தாக்கி எழுதியுள்ளதைப்போல் எந்தத் தீர்ப்பிலாவது தாக்கி எழுதப்பட்டிருக்கிறதா? அல்லது அவர்களைப் பற்றி இந்த போக்கியமான அய்யங்கார் 'இந்து' பத்திரிக்கையில் தலையங்கம் எழுதப் பட்டிருக்கின்றதா? நில விஷயத்தில் அவர் அதாவது, திருச்சி கலெக்டர் ஒரு உத்திரவை போட்டார் என்பதன் காரணமாக, அந்த உத்திரவு ரத்து செய்யவேண்டுமென்று வந்த வழக்கில், அந்த உத்திரவு தப்பு. 'அது ரத்து செய்யப்பட்டு விட்டது' என்று தீர்ப்புக்கூறினால் போதுமானதாய் இருக்கலாம். அதற்கு மேல் கலெக்டரும் இனி அம்மாதிரி உத்

திரவு போடமாட்டார். வேறு அதிகாரிகளும் அம்மாதிரி உத்திரவு போடமாட்டார்கள். இது சாதாரணமாக பெருந்தன்மையில் செய்யப்படக்கூடிய காரியம். இதில் கவனிக்கத்தகுந்த இன்னொரு காரியம் என்ன ஏற்பட்டிருக்கிறது என்றால் ரிட்மனு (writ Petition) விசாரணைக்கு வருவதற்கு முன் மனுதாரர் (வாதி) தரப்பில் ஆஜரான குளித்தலை அட்வகேட் திரு: அண்ணாதுரை அய்யங்கார். அவர்களே, 11—9—56-ம் தேதியில் சென்னையில் ஆஜரான வக்கீல் திரு. நம்பியாருக்கு எழுதிய கடிதத்தில், ரிட்மனு சம்மந்தமான விவகாரங்கள் பைசலாகிக் கொண்டிருப்பதால், வாய்தா வாங்கிக்கொள்ளும்படியும், சர்க்கார் தரப்பு வக்கீல் ரிட்மனு விசாரணைக்கு வரும்போது குறிப்பிட்ட சம்பவங்களுக்குப்பின், கலெக்டர் முன்னாள் போட்ட உத்திரவை (modify) செய்து, மேற்கொண்டு போட்டிருக்கும் உத்திரவுகளைப்பற்றி சொல்லுவார் என்றும், ஆனதால் 16-7-'55—ம் தேதியில் கலெக்டர் போட்டிருக்கும் உத்திரவு சரியா ? தப்பா ? என்று கவனிக்க வேண்டியதில்லைஎன்று, நம் தரப்பில் சொல்லி, மனுவை விசாரணையில்லாமல் முடித்துவிடலாம் என்றும் எழுதியிருக்கிறார். திரு. அண்ணாதுரை அய்யங்கார், திரு. நம்பியாருக்கு எழுதிய அந்தக் கடிதத்தின் நகலை தன்னுடைய கவரிங் லெட்டருடன் (writ Petition) கலெக்டரின் பர்சனல் அஸிஸ்டென்ட் திரு. வில்சனுக்கு எழுதியிருக்கிறார். அந்த இரண்டு லெட்டர்களையும் கலெக்டர் தன்னுடைய வக்கீலான திரு. இராகவனுக்கு அனுப்பி, கோர்ட்டில் அதன்படி விளக்கிக்காட்டி, வழக்கைமுடித்து விடும்படி அனுப்பியதாகத் தெரிய வருகிறது.

7. "ரிட்மனு" விசாரணைக்கு எடுத்தபொழுது கலெக்டருடைய வக்கீல் வழக்குச் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் முடிந்து விட்டதாக கோர்ட்டார் அவர்களிடம் எடுத்துச் சொன்னதாகவும், 'நீதிபதிகள் அதைப் பற்றி

அக்கறையில்லை;மனுவை விசாரித்து முடித்து விடலா மென்று சொல்லி, வழக்கை விசாரித்து இம்மாதிரி முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. அதாவது : ரிட் மனுவில் கண்ட விஷயம் கோர்ட்டுக்கு வெளியிலேயே தீர்ந்து விடுகிறபடியால், விசாரிக்க வேண்டியதில்லை என்று வக்கீல் சொல்லியும், அதைப்பற்றி கவலையில்லை கேசை நடத்திவிடலாம் என்று கேசைநடத்தியிருக்கிறார் கள், என்றால், இது உண்மையாய் இருக்குமானால்,கனம் நீதிபதிகள் நடத்தையில் உள்எண்ணம்கொள்ள வேண்டி யிருக்கிறது. அந்தப்படிகலெக்டரின்வக்கீல்நீதிபதிகளுக்கு விசாரணை நடத்த வேண்டிய அவசியம் இல்லை என்கிற நிலைமையை எடுத்துச் சொல்லாமல்இருந்திருக் கும் பட்சத்தில், அந்தப் பார்ப்பன வக்கீலினுடைய நடத் தை, மேலே குறிப்பிட்டபடி. கலெக்டர் மீது சதி எண் ணம் கொண்டு செய்யப்பட்ட காரியங்களில் ஒரு அம்ச மாக இருக்குமோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. மேலும் அட்வகேட்ஜெனரலாக இருக்கிறவர் கலெக்டர், சர்க்கார் பிரதிநியாக இருந்து செய்த காரியமானதினால், இதன் தன்மைகளைச் சரிவர உணர்ந்து, கலெக்டரின் காரியங்களை முழுதும்ஆதரிக்காவிட்டாலும்,உத்திரவை ரத்து செய்வதோடு• அல்லாமல், விடாமல், கலெக்ட ரையே அடியோடு •கெடுப்பதற்குத் தாராளமாய் இடம் கொடுத்து விட்டு, பேசாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார் என்றால், அதற்காக, கனம் ஜட்ஜுகளும், அட்வகேட் ஜெனரலுக்கு நல்வாழ்த்துக்கூறுகிறார் கள் என்றால், இதை, சதிக்கு மற்றோர் அம்சமாகக் கொள்ளவேண்டியிருக்கின்றது. மற்றும் சாதாரணமாக நாணயக் கேடான காரியங்களில் அதிகாரிகளைத் தண் டிப்பது, குற்றம் கூறுவது, முதலிய காரியங்களுக்குத் தலையங்கம் எழுதாத 'இந்து' பத்திரிகையானது அமை தியைநிலை நிறுத்தச் செய்ய சாதாரண நிர்வாகஉத்திரவு மீது ஏற்பட்ட தீர்ப்பில் மிகக் கடுமையான வார்த்தைக ளைப் போட்டு தலையங்கம் எழுதியிருக்கிற ஆசிரியர்,

பார்ப்பனனாக இருப்பதனாலேயே என்றும், அவர்களும் அதாவது : சாதாரண சம்மந்தமில்லாதவர்களும் சேர்ந்து சதியில் கலந்திருக்கின்றார்கள் என்று எண்ண வேண்டியிருக்கின்றது.

8. ஒரு கலெக்டருக்கு, உத்தியோக முறையில், கலெக்டர் என்ற ஹோதாவில் எத்தனையோ இலாகாகிர் வாகங்கள், நடைமுறை வேலைகளும் இருக்கின்றன. அவைகளில் இந்த தீர்ப்புக்குக் காரணமான உத்திரவு நூற்றில் ஒரு பாகமாக இருக்கலாம். இதுவே கலெக்டருக்கு வேலையும் அல்ல. இந்த மாதிரிக் காரியங்களே அவர் முன்னால் வரக்கூடியவைகளும் அல்ல. ஏதோஒரு சமயத்தில் வரும் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் அவருக்கு எந்தவிதமான உள் எண்ணமும் இருந்திருக்க வேண்டிய அவசியம் காணப்படவில்லை. கலெக்டருடைய மூப்பது வருட நிர்வாக நடத்தைகளைப் பற்றி எந்தவிதமான குற்றமோ குறையோ கூறப்படவில்லை. எவராலும் குறிப்பிடப்படவுமில்லை. இப்படிப்பட்டவர் ஒரு காரியத்தில் தவறுதலான உத்திரவு, அதுவும் தான் தவறு செய்கின்றோம் என்கிற எண்ணமே இல்லாமல், அரசாங்க நோக்கத்தை சரியாகவோ தப்பாகவோ புரிந்து, அதன்பேரில்போடப்பட்ட ஒரு உத்திரவுக்காக, இவ்வளவு பெரிய கொடுமை இழைக்கப்பட்டு விட்டதுதான் என் உள்ளத்தைப் பெரிதும் வருத்திவிட்டது

9. நான் ஏறக்குறைய சமார் 50 ஆண்டு காலமாகவே பார்ப்பன - மேல்ஜாதிமக்கள் -- என்பவர்கள் -- சட்டப்படி சாஸ்திரப்படி-மதத்தின்படி, என்று தாங்கள் அடைந்திருக்கும்வசதியையும், உயர்நிலையையும் பார்ப்பனரல்லாத 'கீழ்' மக்கள் நலனுக்குக் கேடாக பயன் படுத்தும் வாய்ப்பை ஒழிக்கவேண்டுமென்று பாடுபட்டு வருகின்றேன். என்னுடைய பிரதானமான ஒரே தொண்டு இதுதான். இனியும் என்வாழ்நாள் வரையிலும்

ஏற்படுத்திக் கொண்டிருக்கிற தொண்டும் இதுதான். இவ்வளவு நாள் வரையிலும் பாடுபட்டும், இந்நாட்டுப் பார்ப்பனரல்லாத மக்களுக்கு பார்ப்பனர்களால் ஏற்பட்டு வருகிற கொடுமைகள் அவர்கள் தலையெடுக்க வொட்டாமல் அழுத்தப்பட்டு வருகிற துணிச்சலான அநீதிகள் ஒரு குறிப்பிடத்தகுந்த அளவுக்காவது குறைந்திருக்கிற அளவு நிலைத்திருக்குமா என்றும் சொல்ல முடியாது. என்னுடைய தொண்டிலே எத்தனையிலோ ஒரு பாக மான காரியத்திற்காக ஏற்பட்ட இந்தவழக்கில் பிரஸ் தாப ஜட்ஜுகளை நான் தனிப்பட்ட முறையில் தாக்க வில்லை. பிரஸ்தாப வழக்கில் தனிப்பட்ட முறையில் தாக்கவில்லை என்பதோடு, நான் 'இராமசாமி' என்ற தனிப்பட்ட (Personal) தன்மையில் பேசவில்லை: பொதுஜனத் தொண்டன், பொதுமக்களுக்காக பாடுபடு கிறவன், அவர்களுக்காக எந்தத் தியாகமும் செய்யத் தயாராக இருக்கிறவன், என்ற முறையில் கீழ் ஜாதிக் காரர்கள் 'சூத்திரர்கள்' என்று சொல்லப்படுகிற அவர் களின் பிரதிநிதி என்ற முறையில் பேசியிருக்கிறேனே தவிர, என் சொந்த நலத்திற்காக நான் அவ்விதம் பேச வில்லை.

10. கனம் ஜட்ஜுகளுடைய தீர்ப்புக்களை சட்ட முறையில் நான் எவ்விதமான தவறும்கூறவில்லை. அவர் களுடைய உள் எண்ண விஷயங்களில் இந்த வழக்கு அதாவது, கலெக்டர் உத்தரவை ரத்து செய்திருப்பதை, சட்டப்படி என்று நீதி செலுத்தியிருக்கிற விஷயத்தில் அவர்களுக்கு எந்தவிதமான உள் எண்ணங்களை கற்பிக் கவும் இல்லை. சட்டநீதி, பரிபாலனம் கெடும்படியான அளவில் நான் அவர்கள்மீது ஒருவிதமான குற்றத்தையும் எடுத்துக் காட்டவில்லை. என்னுடைய குறிப்பெல்லாம் பொதுவாக பார்ப்பன ஜட்ஜுகள் யாராக இருந்தாலும், அவர்களுடைய நடத்தையில் சட்டத்தைப் பொறுத்து எப்படி நடந்துகொண்டாலும், தமிழனுக்குதன்னாலான

கேடு செய்து அழுத்தவோ, அழிக்கவோ செய்யவேண்டியது அவர்கள் ஜாதி-மதக் கடமை என்பதும், இதில் யாரும் எந்தப் பார்ப்பனரும், மறந்தும், தவறி நடக்க மாட்டார்கள் என்பதும், இந்தநிலை ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டியது மற்றவர்கள் கடமை, என்பதும் தான். இந்த ஜட்ஜ்கள் மீதும் சட்டரீதியில் நான் குறை சொல்லவில்லை என்பதோடு, சட்டரீதியில் தகுதியற்றவர்கள் என்றும் சொல்ல வரவில்லை. நான் சொல்லுவதெல்லாம் எங்களுக்கு, எங்களை 'கீழ்சாதி' என்றும், நாங்கள் மேலே வருவது தங்களுக்கு ஆபத்து என்றும், தங்கள் மத தர்மத்துக்குக் கேடு என்றும். தங்களை மேல் ஜாதி என்றும் இந்த ஜாதிப்பிரிவுகள் இப்படியே இருக்க வேண்டும் என்றும் கருதிக்கொண்டிருக்கின்ற மநுதர்ம-இந்து-பார்ப்பனர்கள், ஜட்ஜ்களாகவும் வேறு எந்த உத்தியோகஸ்தர்களாகவும் எங்கள் நாட்டில் எங்களுக்கு வேண்டாம். வேறு நாட்டில் அவர்களுக்கு எவ்வளவு உயர்பதவி வேண்டுமானாலும் கொடுங்கள். அவற்றில் நாங்கள் குறுக்கிடவில்லை. அவர்கள் நீதிபதிகளாயிருப்பதில் எங்களுக்கு நஷ்டிக்கையில்லை. இந்தக் கருத்தை வெளியிடும் வகையில்தான் பிரஸ்தாப வழக்குப் பேச்சில் நான் பேசியிருக்கிறேன்.

11. பார்ப்பான் நீதிபதியாய், ஆட்சியாளனாய் இருக்கும் நாடு கடும்புலி வாழும் காடேயாகும். ஆதலால் நாங்கள் புலிவேட்டை ஆடுகிறோம். புலி மேலே பாய்ந்தால் ஒருவர் இருவர் கடிபட வேண்டியதுதான். 'எல்லா பார்ப்பனர்களும் அப்படித்தானா? என்று கனம் ஜட்ஜ்கள் சிந்தித்து நான் சொல்லுவதை தவறு என்று கருதலாம்; நம் நாட்டில் இன்றையதினம்உள்ள பார்ப்பனர்களில் ஆச்சாரிய புருஷர்களாய் இருக்கிறவர்களைத் தள்ளிவிட்டு எல்லோரையும் ஒன்றுபோல் பாவித்து பொதுஜன நன்மைக்காக பாடுபடுகின்ற பார்ப்பனர்கள் என்று எண்ணியிருக்கின்ற தன்மையில் உயர்ந்த சீர்திருத்

தக்காரர் காட்டின் விடுதலைக்காகபெரியதியாகங்களைச் செய்தவர்கள் என்ற தன்மையில் இதுவரையில் எந்த இந்தியனும் வகித்திராத உயர்ந்தபதவி வகித்தவர்கள் என்கிற தன்மையில் முதல் வரிசையில் முதல்வராகஇருக்கும் மாஜி கவர்னர்ஜெனரல் உயர்திரு சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சொல்லுகிறார்கள்; 'நான் வேத சாஸ்திர புராண இதிகாச உபநிஷத் தர்மங்களில் முழு நம்பிக்கை உடையவன்; ஜாதிப்பிரிவில் அதாவது, வர்ணாஸ்ரம தர்மத்தில் மிக்க நம்பிக்கையும் கவலையும் உடையவன்; அவைகளைப் பரப்பவும் நிலை நிறுத்தவுமே நான் பாடு படுகிறேன்; இனியும் அதற்காகவேபாடுபடுவேன்', என்று சொல்லுகிறார். எழுதுகிறார். அதற்கு வேண்டிய காரியங்களையும் செய்கிறார் என்றால் இனியாரை மனதில் வைத்துக்கொண்டு 'எல்லா பார்ப்பனர்களும் இப்படித்தான் இருப்பார்களா?' என்று நினைப்பது? வாயில்—நாக்கில்—குற்றம் இருந்தாலொழிய வேம்பு இனிக்காது தேன் கசக்காது. பிறவியில்மாறுதல் இருந்தாலொழியபுலி புல்லைத் தின்னாது. ஆடு மனிதனைத் தின்னாது. அது போல்வாக்கும் நம் பார்ப்பனர்கள் தன்மை இந்த ஒரு வழக்குக்காக அல்ல நான் இப்படிச் சொல்லுவது. என்னுடைய பேச்சுக்குப் பிறகு சென்னை சட்ட சபையில் பொதுமக்கள் பிரதிநிதியாகிய திரு. பி. ரெங்கசாமி ரெட்டியார் பி. ஏ., பி. எல்., அவர்கள் என் கருத்துக்களை மெய்ப்பிக்கிற வகையில் 18—12—56 ம் தேதியில் இந்நாட்டு மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய சென்னைசட்ட சபையில் இதே ரிட்பெடிஷன் நெம்பர். 868/56- இல் ஏற்பட்ட தீர்ப்பைப் பற்றியும், தீர்ப்பு சொன்ன கனம் ஜட்ஜுகளைப்பற்றியும் பின்வருமாறுபேசியிருக்கிறார்:- சென்னை சட்டசபையின் 18-12-56ம் தேதிய நடவடிக்கைகளின் அதிகாரபூர்வமான வெளியீட்டில்:- (வால்யூம் 37 நெம்பர்2)ல் 122, 123, 124 பக்கங்களில் உள்ளபடி:-

'1956-ம் வருஷம் அக்டோபர் மாதம் 24 ம் தேதி ஒரு தினசரிப் பத்திரிகையில் ஒரு செய்தி வெளிவந்தது.

திருச்சி ஜில்லா கலெக்டருக்கு 26 வருஷ சர்வீஸ் ஆகி யிருப்பதாக தெரிகிறது. அவர் இந்த காட்டில் எந்த இடத்திலும் தலைமைஸ்தானம்வகிக்க அருகதையில்லை என்று ஹைக்கோர்ட்டு தீர்ப்பு கொடுத்திருப்பதாகவும் செய்தி வெளிவந்தது. 1956ம் வருஷம் அக்டோபர் மாதம் 24ந் தேதி ஹைக்கோர்ட்டு தீர்ப்பு அளித்து இப் பொழுது இரண்டு மூன்று மாதங்கள் ஆகிறது. எனக்கு ஹைக்கோர்ட்டையும் அவரைப்பற்றியும் அக்கரை இல்லை. இந்த இரண்டு விஷயத்தில் ஒன்று உண்மை யாக இருக்கவேண்டும் அல்லது பொதுஜனங்கள் சொன் னது ஒன்று சரியாக இருக்க வேண்டும அப்பொழுது ஹைக்கோர்ட் தீர்ப்பு தப்பு என்று ஆகிறது. இதைத் தவிர மூன்றாவது பிரச்னை இருக்க முடியாது. 1956ம் வருஷம் நவம்பர் மாதம் 4-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று திருச்சி டவுன்ஹால் மைதானத்தில் திராவிடக் கழகத்தாரால் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அதற்கு திரு. வேதாசலம், பெரியார் முதலியவர்கள் தலைமை வகித்தார்கள். அத்துடன் இரண்டு மூன்று சட்டசபை அங்கத்தினர்களும் ஒரு லோக் சபை அங்கத் தினரும் வந்திருந்தார்கள். இவர்கள் எல்லோரும்சேர்ந்து ஒருமுகமாக ஹைக்கோர்ட்டுடைய தீர்ப்பைஎதிர்த்து கண்டனம் தெரிவித்தார்கள். அது கண்டிப்பாக சர்க்கா ருடைய கவனத்திற்கு வந்திருக்கும் என்று நினைக்கி றேன். ஏனென்றால், அதை அங்கு சுருக்கெழுத்தாளர் கள் வந்து குறிப்பு எழுதிக் கொண்டிருந்தார்கள். 1956ம் வருடம் நவம்பர் மாதம் 4ந் தேதிக்குப் பிறகு இப்போது சுமார் 30 அல்லது 36 நாட்கள் ஆகிவிட்டது. இந்த விஷ யம் பற்றி சர்க்கார் செய்தது என்ன? முன்பு ஒருதடவை அம்பேத்கார் அவர்கள் கம்யூனல் ஜீ. ஓ. சம்பந்தமாக சொன்னபோது ஒன்று குறிப்பிட்டார். அதாவது:—

"I am to be bound by the decision but Iam not bound to respect the same"—என்று

அவர் சொல்லியிருக்கிறார். பொதுமக்கள் இதைப் பற்றி சொல்லுகிறார்கள். ஹைகோர்ட்டின் தீர்ப்பு சரியாக இருக்கலாம். அது எப்படி இருந்தாலும், இதற்கு யார் ஜவாப்தாரி என்பதை யோசிக்க வேண்டும். அப்ப் கோர்ட்டு ஜட்ஜுகளைப் பற்றி பேசலாம். அந்தத் தீர்ப் பைப் பற்றி இப்போது பொதுமக்கள் கிரிடிசைஸ் பண் ணுகிறார்கள். ஆனால் இந்த தீர்ப்பைப்பற்றி கவனிக்கும் போது இது சாதாரணமாக ஏற்பட்ட தீர்ப்பு அல்ல. இதற்கு மூலகாரணம் இருப்பதாகத் தெரியவருகிறது. ஸ்ரீரங்கத்தில் சாமி அய்யங்கார் என்று ஒருவர் இருக்கி றார். அவரை ஆனரரி பெஞ்சு மாஜிஸ்திரேட்டாக ஆக்க வேண்டுமென்று திருச்சி ஜூடிஷியல் ஆபீசர் சிபார்சு செய்திருந்ததாகவும், அதை மலையப்பன் அவர்கள் நிராக ரித்து விட்டதாகவும் அதன் மூலம் மலையப்பன் பேரில் மேலதிகாரிகள் பிரிஜூடிஸ் ஆகியிருப்பதாகவும் தெரிய வருகிறது. சாமி அய்யங்கார் சி. டி. வெங்கட்டரமணன் அவர்களை அணுகி, அவர் சாமி அய்யங்கார் பேரில் ஏற் பிட்ட தீர்ப்பினால் கோபம் அடைந்து இப்படிப்பட்ட ஜட்ஜ்மெண்ட் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது. இப்ப டிப்பட்ட வதந்தி திருச்சியில் இப்பொழுது நிலவி வருகின்றது. இந்த சாமி அய்யங்கார் அவர்கள் சி. டி. வெங்கட்டரமணன் அவர்களுக்கு நெய்; எண்ணெய் முதலியவைகள் சப்ளை செய்யக்கூடி யவர் என்றும் தெரியவருகிறது. இதைப் பற்றி 1956-ம் வருடம் அக்டோபர் மாதம் 26ம் தேதி 'இந்து' பத்திரி க்கை ஒரு தலையங்கம் எழுதி இருக்கிறது. அதில் கடைசியில் ஒன்று குறிப்பிடபட்டிருக்கிது. அதில் அய்க்கோர்ட்டு ஜட்ஜ்மெண்ட்டைப் பற்றியும்குறிப்பிட் டிருக்கிறது.

"It is for the Goernment to consider and consider seriously whether an officer of such totalitarian views and disregard of law should

continue to be entrusted with the duties of maintaining law and order in any locality in this State"

நம் மாகாணத்தில் ஏதாகிலும் இபபடிப்பட்ட செய்திகள் வந்தால் அதைப்பற்றி சர்க்கார் நடவடிக்கை எடுப்பதுண்டு. இதற்கு முன்பு இருந்த சர்க்கார் அப்படி நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறது. இதற்கு முன்பு ஒருதடவை இப்படியே நடந்திருக்கின்றது. சர்க்காருக்குத்தெரிந்தால் அலாகாபாத் அய்க்கோர்ட் நீதிபதியாக இருந்தசின்ஹா மேல் கனம்ராஜகோபாலாச்சாரியார் கவர்னர் ஜெனரலாகஇருந்தபோது,ஜூடிஷியல் நடவடிக்கை எடுத்தார்கள். பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் நடந்த 100 ஆண்டுக்கு உள்ளாக ஒரே ஒரு தீகழ்ச்சி இந்த நீதிபதி சின்ஹாவின்மேல் நடவடிக்கை எடுத்ததுதான். அந்த ஜட்ஜ்மெண்டின் காப்பி, பேப்பரில்வந்ததை நான்இன்னமும் வைத்திருக்கிறேன். ஆகவே இவ்விஷயத்திலும் சர்க்கார் உடனே அந்த கலெக்டரை வேறு ஜில்லாவிற்கு மாற்றுதல் செய்வதோ அல்லது வேறு இலாகாவில் போடுவதோ அல்ல. உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு பாரபட்சமானதா? அல்லது வேறு பல காரணங்களினால் அவ்வாறு தீர்ப்பு அளிக்கப்பட்டதா? என்பதை பரிசீலனை செய்ய வேண்டும். ஹைக்கோர்ட் ஜட்ஜாக இருந்தாலும், சுப்ரீம் கோட்டு ஜட்ஜாக இருந்தாலும் அவர்களும் மனிதர்கள்தான். மனிதர்களுடையஇயல்புகள் அவர்களுக்கும் உண்டு. பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை ஆகியஎல்லா உணர்ச்சிகளுக்கும் அவர்கள் கட்டுப்பட்டவர்கள்தாம். அவர்களை ஏதோ பெரிய 'டிவைன்பர்சன்' ஆக கருதவில்லை. அவர்களும் வரவர சில ஊழல்களைப் புரிபவர்களாக இருக்கிறார்கள்; என்பதைத்தான் சட்டசபையில் சொல்வேன். ஆகவே உடனடியாக இதைப்பற்றி பரிசீலனைசெய்துஒருமுடிவு

காணவேண்டும். இல்லாவிட்டால் அரசாங்கத்திடம் மக்களுக்கு இருக்கவேண்டிய மதிப்பு இருக்காது. அவர்களுக்கு எல்லாம் தெரிந்த விஷயம் பத்திரிகைகளில் வந்திருக்கக்கூடிய செய்திகள்தாம். அதைப்பார்த்து விட்டு அவர்கள் கோர்ட்டின் தீர்ப்பை சர்க்கார் அலட்சியப்படுத்திவிட்டதாகவே நினைக்கிறார்கள். இது விஷயத்தில் சர்க்கார் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும். இந்த அரசாங்கம் போனவுடன் வருகின்ற அரசாங்கம் அவ்வேலையைச் செய்யட்டும் என்று வாளா இராமல் வருகின்ற பொதுத்தேர்தலுக்கு முன்பாகவே இப்பிரச்னையில் ஒரு முடிவு காணவேண்டுமென்பதாக வற்புறுத்திச் சொல்லிவிட்டு அவ்விஷயத்தை நான் அத்துடன் முடித்துக்கொள்ள விரும்புகிறேன்,

The Hon. Sri. G. Subramaniam.

'தங்களுடைய யோசனை என்ன என்பதை சொல்ல வில்லையே.''

ஸ்ரீ. பி. ரெங்கசாமி ரெட்டியார்:

என்னுடைய யோசனை பொதுமக்களையும்கலந்து கொண்டு அவர்களுக்கு மதிப்புக்கொடுத்து இவ்விஷயத்தைப் பரிசிலனை செய்யவேண்டும் என்பதே. இதைப்பற்றி பகிரங்கமாக விசாரணைசெய்ய திருச்சிக்கே நேரில்வந்தால் நான் ரெக்கார்டுகள் மூலம் அவர்களுக்குச் சாட்சி சொல்லுகிறேன். ஆதார பூர்வமான தகவல்களை எல்லாம் பகிரங்கமாக சொல்லத்தயார் ஆகையால் இதைப்பற்றி விசாரணை நடத்துங்கள். இதிலே ஹைக் கோர்ட்டிலேயே சில தகராறுகள் இருக்கின்றன கோளாறுகள் இருக்கின்றன. சம்மந்தப்பட்ட நீதிபதிகள் திருச்சி வந்தார்கள். ஸ்ரீரங்கத்திற்கும் சென்றார்கள்.

10-50 a. m.

Deputy Speaker:-

Now I have to draw the attention of the Hon. Member to Artticle 211 of the Constitution which says:

"No discussion shall take place in the Legislature of state with respect to the conduct of any Judge of the Supreme Court or of a High Court in the discharge of his duties"

Sri P. Rengasamy Reddiar:-

Sri I want to draw the attention of the Chair and the attention of the House to Rule No. 66, Sub. Clause (4)

Deputy Speaker:-

I am referring to Articles 211 of the Constitution.

The Hon'ble Sri C. Subramaniam:

Whatever it is, the Hon. Member has made mention of his point and I do not think he need labour upon that. He can pass on to the next point.

Sri P. Rengaswamy Reddiar:

இதைப்பற்றி நிதியமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். தப்பு அபிப்பிராயம் ஒன்றும் இல்லை. நான் சொல்லவேண்டிய விஷயங்கள் எல்லாவற்றையும் அநேகமாக கூறிவிட்டேன். இதுபற்றி பகிரங்க விசாரணை நடத்தத்தயாராயிருந்தால் நானும் மற்றவர்களும்சாட்சிசொல்லத்தயாராய் இருக்கிறோம் என்பதையும் சொல்லிகொள்கிறேன்.

12. திரு. ரெங்கசாமி ரெட்டியார் எம். எல். ஏ., 18-12-56 ம் தேதியில் சென்னை சட்டசபையில்பேசி இருப்பதைவிட நான் திருச்சி பொதுக் கூட்டத்தில், சம்பந்தப்பட்ட கனம் நீதிபதிகளை அதிகமாகத் தாக்கியோ உள் எண்ணம், கற்பித்தோ ஒன்றும் பேசிவிடவில்லை. சட்டசபையில் பேசிய பேச்சுச்சாக திரு பி. ரெங்கசாமி ரெட்டியார் பேரில் கோர்ட்டை அவமதித்த குற்றத்திற்காகவோ வேறு எந்தக் குற்றம் சாட்டியோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர்மீது நடவடிக்கை எடுக்கமுடியாது என்றும் சொல்லுகிறார்கள் இது என்ன விபரீதம்! ஒரே விஷயத்தைப்பற்றி சட்ட சபையில் பேசினதற்கு சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது. வெளியில் அதே விஷயத்தைப்பற்றி (mild) ஆக பேசியதற்காக கண்டம்ப்ட் ஆஃப் கோர்ட் என்ற குற்றம் சாட்டி நடவடிக்கை எடுக்க அதே சட்டம் இடம் கொடுக்கிறது. நியாயப்படி இரண்டு பேர்களுடைய பேச்சிலும் எவ்வித குற்றமும் இல்லை. சட்டப்படி ஒருவர் பேசியது குற்றம். மற்றவர் பேசியது குற்றமில்லை. திரு. ரெங்கசாமி ரெட்டியார் பேசினபிறகாவது சர்க்கார் சம்பந்தப்பட்ட கனம் நீதிபதிகளைப் பொறுத்து உடனடியாக விசாரணை நடத்த ஏற்பாடு செய்திருந்தால் இந்த 'கண்டம்ப்ட் ஆப்கோர்ட்' (contempt of court) நடவடிக்கைகளுக்கு இடம் இருந்திருக்காது.

13. ஹைக்கோர்ட்டு ஜட்ஜுகளைப் பற்றி விசாரணை நடத்துவதா என்ற அய்யப்பாடும் சமய நீதிபதிகளுக்கு எழலாம். தற்போது உத்தரப் பிரதேசம் என்று அழைக்கப்படும் பழைய அய்க்கிய மாகாண சர்க்காரால் [யுனைடட் பிராவின்ஸ்] அலஹாபாத் ஹைக்கோர்ட்டு ஜட்ஜாக இருந்த திரு சின்ஹா என்பவர் ஜட ஜ்கஇருந்த காலத்தில் தான் செய்யவேண்டிய நீதி பரிபாலன காரியங்களைத் தாறுமாறான வகையில் செய்தார் என்றும் பட்ரவுனா வழக்கு [padrauna case], மூராளிலால் வழக்கு (Muralilal case) இந்த இரு வழக்குகளில் தீர்ப்பு சொன்னது அந்தஜட ஜால நீதி பரிபாலனத்தற்குப் புறம்பான சலுகைகள் காரணமாக (Extra judicial--Considerations) ஏற்பட்டவைஎன்று குற்றம்சாட்டி அப்போதைய கவர்னர் ஜெனரலாக இருந்த உயர்திரு ராஜகோபாலாச்சாரியார் அவர்களுக்குத தெரிவிக்கப்பட்டது. கவர்னர் ஜெனரலும் அந்த விஷயங்கள் குறித்து விசாரித்து ரிப்போர்ட் அனுப்புமபடி பெடரல் கோர்ட்டுக்கு தெரிவித்தார். பெடரல் கோர்ட்டும் விசாரணை செய்த பிறகு,

"In our opinion in those two cases, he was actuated by extra judicial considerations in arriving at his conclusions. We consider that his couduct in two cases viewed in the light of proved facts, cannot be explained as an honest error of Judgment"

பட்ரவுனா கேசில் அந்த ஜட்ஜ் சின்ஹாவினுடைய சகோதரர் அட்வகேட் திரு. சமபுபிரசாத எனபவர் 5-6-45-ல் வெகேஷன்கோர்ட்டில்முதல் பிரதிவாதிக்காக சில நடவடிக்கைகளில் ஆஜராகி இருந்ததையும் பெட

ரல் கோர்ட் தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறார்கள். பெடரல் கோர்ட் ரிப்போர்ட்டை ஒப்புக்கொண்டு திரு. சின்ஹாவை ஜட்ஜ் பதவியிலிருந்து நீக்கிவிட்டார்கள். இச் செய்தி 29-4-49ம் தேதி சென்னை 'மெயில்' பத்திரிகையில் வெளிவந்துள்ளது. அப்படிப்பட்ட சின்ஹாக்கள் நமது புனிதமான சென்னை ஹைக்கோர்ட்டில் இருக்கப் படாது என்பதே எனது எண்ணம். சமீப காலத்தில் மைசூர் ஹைக்கோர்ட் ஜட்ஜ் ஒருவரை இந்திய குடியரசு தலைவர் நீக்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

14. திரு. ரெங்கசாமி ரெட்டியார் சட்டசபையில் பேசியிருக்கிறபடி கனம் ஜட்ஜுகளும் சாதாரண மக்களைப் போன்றவர்கள் தான். நேர்மையிலும் நாணயத்திலும் சுடுகளவும் தவறாத ஜட்ஜுகளும் உண்டு. தவறி நடப்பவர்களும் உண்டு தவறி நடக்கும் ஜட்ஜுகளைப் பற்றியும் அவர்கள் அக்கிரம தீர்ப்புகளைப் பற்றியும் எவ்விதமான சொந்தமாச்சரியமும் இல்லாமல் (Malice) பொதுநல நல்லெண்ணத்துடன் (bonafide) நியாயமாக (Honest) ஆலோசனம் செய்வது [criticise] என்பது எவ்வாறு தவறாகும். அப்படி தவறு என்றால் ஜட்ஜுகள் அக்கிரமம் செய்யலாம். நடுநிலைமை பிறழ்ந்து தீர்ப்புகள் கூறலாம். அது சட்டப்படி தவறில்லை. ஆனால் அதைப்பற்றிப் பேசினால், எடுத்துச் சொன்னால் தவறு என்று அல்லவா ஆகிறது? இது எந்த விதத்தில் நியாயமாகும்? அக்கிரமம் செய்யும் ஜட்ஜுகளைப்பற்றிப் பேசினால் கோர்ட்டு அவமதிப்பு குற்றம் என்றால் யார் தான் அதைப்பற்றிப் பேச முன் வருவார்கள்?

15. அப்படி ஜட்ஜுகள் என்ன அநீதி இழைக்காமலா இருக்கின்றார்கள்?

(i) This is an audacious attempt by a BRAHMIN Judge to invent a new rule, name-

lly that a daughter who is unchaste is under the same rule of exclusion as a widow and cannot inherit her father's or mother's estate..... The reason why the learned judge seems tohave stretched the law was the while apparently he was prepared to admit that ordinary unchastity might not be fatal, cohabitation with a Mohammedan was such an aggravated form of unchastity that different considerations should apply."

(தயவுசெய்து 51-எம்.எல்.ஜே. 387-பக்கம் பார்க்கவும்) ஒரு பார்ப்பனசப்ஜட்ஜ் சட்டவிரோதமாக நியாயம் வழங்கினார் என்று உயர்நீதிமன்றம் கண்டித்தது.

(2) சென்னை ஹைக்கோர்ட் கிரிமினில் அப்பீல் நெம்பர் 20/56-இல் முடிவு செய்திருக்கும் தீர்ப்பில் இருப்பது:-

'The special judge has gone to the extent on making a stupid and almost insulting suggestion, that the wife inside the kitchen and the aged father inside the house, presumably of the P. W. I. should have been examined to corroborate him. It is not usual as our own experience shows in the household of officers, for wives and children and parents to be present in the office and

participate in what is going on there. Probably the special judge's experience in his own house-hold is different (Judgement dated 31-10-56 in Cr. A. No. 20/56 on the file of High Court of Judicature Madras delivered by Hon. Justice Mr. P. N. Ramasamy.)

இதில் சம்பந்தப்பட்ட கீழ்க்கோர்ட்டு ஸ்பெஷல் ஜட்ஜ் ஒரு முஸ்லிம் என்பதும் அப்பீல் கோர்ட்டாகிய ஹைகோர்ட்டு ஜட்ஜ் ஒரு பார்ப்பன ஜட்ஜ் என்பதும், தான் காரணமாகவும், இவ்வளவு கடினமாகவும் கீழ்த்தர மாகவும் தன்கீழ் உள்ள சப்ஆர்டினேட் ஜட்ஜைப்பற்றி தாக்கி எழுதியிருப்பதற்கு:—

3) 1950ம் வருடத்தில் துறையூரில் திரு. ராமானுஜ அய்யங்கார் என்ற ஒரு டிஸ்டிரிக்ட் முன்சீப் பார்ப் பரல்லாத வக்கீல் திரு. பி. ரெங்கசாமி ரெட்டியாரின் ஓ. எஸ். நெம்பர். 215/49ல் விசாரணை நடந்துகொண் டிருக்கும்போது சட்டவிரோதமாகவும் வக்கீலை அனா வசியமாக அவமதிக்கும் முறையிலும் ஜாதி ஆணவம் கொண்டு நடந்துகொண்டார்.

அந்த அய்யங்கார் முன்சீப்பேரில் திருச்சி சப்கோர்ட் ஓ. எஸ். நெம்பர். 213/51ல் வக்கீல் ரெங்கசாமி ரெட்டி யார் முன்சீப் ராமானுஜ அய்யங்கார் பேரில். ரூ. 3500க்கு மான நஷ்டத்திற்காக தாவா செய்தார். அந்த தாவாவில் எதிர் வியாஜ்ஜியம் செய்து கடைசியாக இந்த அய்யங்கார் முன்சீப் 16-2-54-இல்

"I regret for my behaviour towards Plaintiff on 9-8-50 and tender my apologies to him."-

என்று பிராதின்பேரில் என்டார்ஸ் செய்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டதின் பேரில் அந்த தாவா மேற்கொண்டு நடத்தப்படவில்லை. இது பார்ப்பன அதிகாரிகள் எவ்வளவு தூரம் பார்ப்பனரல்லாதாருக்கு தொந்திரவு கொடுப்பார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு. அந்த முன்சீப்பை வேலையிலிருந்து நீக்காமல் ஒரு ஹைக் கோர்ட் டிபார்மெண்டில் விசாரணை செய்து புரோபேஷனை மட்டும் இரண்டு வருடம் அதிகப்படுத்தியதாகத் தெரிகிறது.

(4) சமீபத்தில் சமூகம் கோர்ட்டு பார்ப்பன ஜட்ஜ்களுள் ஒருவராகிய கனம். பாலகிருஷ்ணய்யர் பார்ப்பனரல்லாத மந்திரியாகிய கனம். பக்தவத்சலம், கோர்ட்டில் நேரில் ஆஜராகாமல் இருக்க விதிவிலக்குக் கோரி போட்டிருந்த மனுவின்பேரில் தீர்ப்பு சொல்லும்போது மந்திரிகள் பல கிராமங்களுக்குச் சென்று பல திறப்பட்ட சாதாரண திறப்பு விழாக்களில் எல்லாம் கலந்துகொள்ளலாம் கோர்ட்டிற்கு மட்டும் வரக்கூடாதா? என்று கிண்டல் செய்யும் பாணியில் எழுதியிருக்கிறார். அதே விஷயத்தில் கனம். பக்தவத்சலத்திற்கு பதில் ஒரு பார்ப்பன மந்திரி "திரு. ராஜ ஜி போன்ற ஒருவர் மனுப்போட்டிருந்தால் இம்மாதி எழுதி இருப்பாரா? சட்டப்படி ப[illegible] அனுமதிப்பதற்கல்லை" என்று சுருக்கமாய் எழுதியிருக்கமாட்டாரா?

(5) திரு. இராசகோபாலாச்சாரியார் மத்திய சர்க்காரில் உள்நாட்டு மந்திரியாக இருந்தபோது பெங்களூர் எல். எஸ். ராஜு என்ற பார்ப்பன அய்யங்கார் வக்கீல் மீது தொடரப்பட்ட வழக்கில் அவரைத் தப்புவிப்பதற்காக கிரிமினல் புரொசீஜர் கோடையே திருத்துவதற்காக செய்த பிரயத்தனமும் தற்போதைய டெல்லி மக்கள் சபை சபாநாயகராய் இருக்கும் திரு. அனந்தசயனம் அய்யங்கார் என்ற பார்ப்பனர் தன்னுடைய அதிகாரம்

பதவி இவைகளை உபயோகப்படுத்தி அந்த குற்றம் சாட்டப்பட்ட பார்ப்பன வக்கீலை விடுதலை செய்வதற்கு செய்த பகீரதப்பிரயத்தனங்களும் எதை எடுத்துக் காட்டுகின்றன? இத்துடன தாக்கல் செய்யப்பட்டிருக்கும் அய்யங்கார் கோஷ்டியின் ஆதிக்கமும் அட்டூழியமும் காட்டக்கூடிய "ஜாதிக்குறி" என்ற புத்தகத்தைப் பார்த்தால் முழு விவரங்களும் தெரியவரும்.

16. இந்த நாட்டில் ஜாதிமுறை, பிரிவு, கீழ்ஜாதி மேல்ஜாதி இருந்து வருகிறது. ஆட்சியும் ஆதிக்கமும் பெரிதும் மேல் ஜாதிக்குச் சொந்தம் அவர்களிடம் அல்லலும் அடிபடுவது கீழ் ஜாதிக்காரர்களுக்குச் சொந்தம். இது சட்டப்படி, சாஸ்திரப்படி, "கடவுள் சிருஷ்டியின்படி" இந்த நாட்டில் இருந்து வருகின்றது. இதை மாற்றுவதுதான் எங்கள் முயற்சி. இதற்கு நாங்கள் தக்க விலை கொடுத்தாக வேண்டும். ஆகையால் நீங்கள் கனம் கோர்ட்டார். இஷ்டப்பட்ட விலை போடுங்கள். ஹைக் கோர்ட் ஆதிக்கம் பார்ப்பனர்களிடமே இருந்து வந்திருக்கிறது. கீழ் ஜாதிக்காரர்கள் 100க்கு 90 பேர்கள் உள்ள இந்த நாட்டில் 'மேல்ஜாதி' ஜட்ஜுகள் ஏன் 100க்கு 50, 60, 70 பேர்கள்? 'கீழ்ஜாதிஜட்ஜுகள்' ஏன் 100க்கு 25 பேர்கள் இவைகள் எல்லாம் கேட்டால் 'கண்டம்ப்ட் ஆப் கோர்ட்' குற்றமா?

17. சட்ட சபையில் திரு. ரங்கசாமி ரெட்டியார் பேசியிருக்கிறபடி ஏன் இந்த ஜட்ஜுகள் பேரில் விசாரணை நடத்தப்பட வில்லை? "சாமி அய்யங்கார் (சௌமி நாராயண அய்யங்கார் என்பது உண்மை பெயர்) நெய், பால், திருச்சி ஜூடிசியல் மாஜிஸ்டிரேட சிடி. வெங்கட்ட ரமணனுக்கு சப்ளை செய்பவர் என்றும் சாமி அய்யங்காரை கலெக்டர் மலையப்பனிடம் ஹானரரி மாஜிஸ்டிரேட்டாக போடும்படி சிபார்சு செய்து

அதன்படி நடக்கததால் கலெக்டர் பேரில் சி. டி. வெங்கட்டரமணனுக்கு கோபம் ஏற்பட்டு, அவர் அவருக்கு வேண்டிய ஹைக்கோர்ட் ஜட்ஜ் கனம் நீதிபதி ராஜ கோபால அய்யங்காரை சீரங்கம அழைத்து வந்து விருந்து வைத்தார் என்றும் பின்பு சில தகராறுகள் நடந்த இடமாகிய திமமாச்சி புரத்திற்கு மேற் கூறியவர்கள் சென்று வந்தார் என்றும் ரிட்பெடிஷன் ஜட்ஜ்மெண்ட் சொல்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே அபீதாது திருச்சியில் புரோபேஷனரி கலெக்டராக இருந்த வேத நாராயணன் என்பவரும் சி. டி. வெங்கட்டரமணன் என்பவரும் ஹைக்கோர்ட்டில் கலெக்டரை கடுமையாகத் தாக்கி ஜட்ஜ்மெண்ட் தயாராகி வருகிறது என்றும் வெளிப்படையாகவே சொல்லுவ அளவிற்கு சதி நடந்திருக்கின்றது' என்ற விஷயங்கள் எல்லாம் மேலே சொல்லப்பட்ட அலஹாபாத் ஹைகோர்ட் ஜட்ஜ் திரு. சின்ஹா அவர்கள் செய்த குற்றங்களைவிட குறைந்தவைகளா ? அல்லது அற்பமானவைகளா ?

18. கனம் நீதிபதியவர்கள் கவனிக்க வேண்டிய விஷயங்கள்.

1. ரிட்பெடிஷன் ஜட்ஜ்மெண்டில் கலெக்டர் 15—7—55 ல் போட்ட உத்திரவை ரத்து செய்து தீர்ப்பு சொல்லுவதற்குப் பதிலாக கடுமையாக கலெக்டரைத் தாக்கி எழுத வேண்டிய காரணம் என்ன ?

2. திரு. மலையப்பனுக்குப் பதிலாக ஒரு பார்ப்பனர் கலெக்டராக இருந்திருந்தால் இவ்வாறு தாக்கி எழுதியிருப்பார்களா ?

3. நீதி இலாகா அல்லது வேறு எந்த இலாகாவிலாவது பார்ப்பன கீழ் அதிகாரி ஒருவரை பார்ப்பன மேல் அதிகாரி ஒருவர் இந்தமாதிரி எப்போதாகிலும் தாக்கி

எழுதியிருக்கிறார்களா ? என்பவைகளை எல்லாம் நன்கு பரிசீல்னை செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டிய விஷயங்கள். சம்பந்தப்பட்ட இரண்டு கனம் ஜட்ஜுகளும் உள்ளபடியே பாரபக்ஷமில்லாத முறையில் எவ்வித உள் எண்ணமும் இல்லாமல் நடந்துகொண்டிருந்தால் சட்ட சபையிலும் வெளியிலும் இவ்வாறு பேசப்படுமா ? மற்ற கனம் ஜட்ஜுகளைப்பற்றி அவ்வாறு பேசப்படுகின்றதா ? அந்த இரண்டு ஜட்ஜுகளும் எவ்வளவு தவறு வேண்டுமானாலும் செய்யலாம்; அது குற்றம் அல்ல. ஆனால் அந்தத் தவறை நான் எடுத்துச் சென்னது. குற்றம் என்றால் நான் அதை முழு மூச்சுடன் எதிர்க்கிறேன். அதுமாதிரியான சட்டத்தை நான் ஒப்புக்கொள்ளுவதற்கில்லை. அதனால்தான் நான் இந்த விசாரணையில் கலந்துகொள்ளவில்லை. 'கோர்ட்டை அவமதிப்பதாக குற்றம் சுமத்துவது என்பது பொதுவாக கோர்ட்டுகளின் கவுரவத்தையும் நீதிபரிபாலனத்திற்கு தடங்கல் விளையாமல் பாதுகாப்பதற்கும் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டுமேயன்றி, நீதிபதிகளின் சொந்த கவுரவத்தைக் காப்பாற்றுவதற்கும் அவர்கள் தனியான நபர்கள் என்கிற முறையில் அவர்களுக்கு ஏற்படுகிற இழுக்குகள் அல்லது பழிகளிலிருந்து காப்பாற்றுவதற்கு ஆக இருக்கக்கூடாது. கோர்ட்டுகளுக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தைத் தனிப்பட்ட நீதிபதிகள் தங்களுடைய சொந்த கவுரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்கு என்று அவர்களுக்கு தனி நபர்கள் மீதுள்ள வெறுப்பின் காரணமாக பயன்படுத்திக் கொள்வது முறையல்ல.

"(Proceedings for contempt of Court have always been understood to be intended not for the vindication of the personal dignity of the judges or to protect them from insults as indi-

viduals but to vindicate the authority and dignity of the Court itself. and to prevent acts tending to obstruct the due Course of justice. Equally, any attempt to use the power possessed by Courts to punish persons for contempt to vent private spite or to gain private ends has never been tolerated "— Forward dated 23-3-51 by the Hon. the chief justice Mr. P. V. Rajamannar to the book, The law of contempt of Court. By Mr. V. G. Ramachandran).

19. இதுமாதிரி விஷயம் எப்படி இருந்தாலும் உண்மையில விவாதத்திற்கு இடமில்லாமல் ஒரு நீதிபதி என்பவர் தவறானது என்று சொல்லும்படியான தன்மையில் நடந்து கொண்டால தீர்ப்பு அளித்தால் அதற்குப் பரிகாரம் தேடவேண்டுமானால், பொதுமக்களுக்கு வழி என்ன இருக்கிறது? அப்பீலுக்கே போய்த் தீரவேண்டுமானால் எல்லோருக்கும் சாத்தியப்படும்படியான காரியமாகுமா? எல்லோருக்கும் எல்லா காரியங்களிலும் அப்பீலில் இடமிருக்குமா? அரசாங்கத்தில் அரசர்-ராஷ்டிரபதி-பிரதமர் - முதலமைச்சர் - முதலியவர்களுடைய போக்குகளைப்பற்றியும், உத்திரவுகளைப்பற்றியும் பொதுக்கண்டனங்களும் கிளர்ச்சிகளும் செய்ய தாராளமாக இடமும் சட்ட அனுமதியும் இருக்கும்போது இந்த ஜட்ஜ்களைப் பொறுத்தமாத்திரம் அம்மாதிரியான இடமும அனுமதியும் கிடையாது என்றால் மக்களுக்கு சுதந்திரம் எங்கே இருக்கின்றது? பரிகாரம் எப்படித் தேடுவது? பொது ஜனங்களுடைய உணர்ச்சிகளை எப்படி காட்டுவது? 'சீசர் பெண்டாட்டி சந்தேகத்

திற்கு இடமில்லாதவளாய் இருக்கவேண்டும்' என்பதான காரியங்கள் மிகவும் யோசிக்கதக்கவைகள். என்னுடைய பிரச்னை எல்லாம் ஜட்ஜ்களைக் குறை சொல்லுவதல்ல. பார்ப்பனர்கள் நமக்கு ஜட்ஜ்களாக இருக்கக்கூடாது என்பதுதான். வெள்ளைக்காரர்களைக் குறிப்பிட்டு, இந்த முறையில்தானே நாம் சுதந்திரப் போராட்டத்தில் போராடியிருக்கின்றோம். வெள்ளைக்காரன் எவ்வளவு உயர்ந்த அதிகாரியாக இருந்தாலும் அவன் வெள்ளையன் என்கிற முறையில் இதைச் செய்தான் அதைச் செய்தான் என்று ஏராளமான விஷயங்களை எடுத்துக்காட்டி கிளர்ச்சி செய்திருக்கிறோம். அதே முறையில் கிளர்ச்சி செய்ய வேண்டிய அவசியத்தில்தான் இது நேர்ந்தது என்பதைப் பணிவாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

20. இந்த ஸ்டேட்மெண்டில் நான் எடுத்துக் காட்டியிருக்கிற விஷயங்கள் எல்லாம் எவ்வித குரோத துவேஷ உணர்ச்சியில்லாமல் என் இன மக்களுடைய உண்மையானதும் அவசியமானதுமான நலன் கருதி ஒரு யோக்கியமான பொதுநலத்தொண்டன் என்கிற தன்மையில் ஹைகோர்ட்டார் அவர்களுக்கும் கனம் நீதிபதிகளுக்கும் சமர்ப்பித்துக்கொண்டிருக்கிறேன். இதன்மீது கனம் நீதிபதிகளுடைய சித்தம் எதுவோ அது என்னுடைய பாக்கியம் என்பதாகக் கருதி எதையும் ஏற்கத் தயாராக இருக்கிறேன்.

தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ஆதாரவுகள்:

1. 18—12 - 56ம் தேதிய சென்னை சட்டசபை யின் நடவடிக்கைகள்:
2. "ஜாதிக்குறி" என்ற புத்தகம்.

(ஒப்பம்) ஈ. வெ. ராமசாமி.

23-4-'57

பிரதம நீதிபதி திரு. ராஜ்மன்னார்

அவர்கள் வாசித்த

தீர்ப்பு விவரம்: (Judgement)

"எதிர்மனுதாரர்கள் திரு. ஈ. வெ. ராமசாமி, திருமதி ஈ. வெ. ரா மணியம்மை ஆகியோர் மீது கோர்ட்டார் தமக்கு தேவையெனப்பட்ட நடவடிக்கை எடுக்குமாறு அட்வகேட்-ஜெனரல் மனுச்செய்திருக்கிறார். இந்த மனுவுக்கு ஆதாரமாகச் சேர்க்கபட்டுள்ள பிரமாணத்தில், இரண்டாவது எதிர்மனுதாரர்-திருமதி ஈ. வெ. ரா. மணியம்மையார் — சென்னையினின்று வெளிவரும் 'விடுதலை' பத்திரிகையின் ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவரென்றும், 1956. நவம்ப 6, 1956 நவம்பர் 7தேதிகளடங்கிய இதழின் இரண்டாம் பக்கத்தில் "கோர்ட்டை அவமதிப்பதல்ல," என்ற தலைப்பில் தலையங்கக் கட்டுரையை வெளியிட்டாரென்றும், அதில் 1956 நவம்பர் 4ந்தேதி திருச்சியில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் முதலாவது எதிர்மனுதாரர், திருச்சி கலெக்டருடைய ஒரு உத்தரவின் பேரில், இரண்டு உயர் நீதிமன்ற நீதிபதிகள் அளித்த தீர்ப்பை வெளிப்படையாகவே விமர்சனம் செய்தாரென்றும் கூறப்பட்டுள்ளது அது 1956 அக்டோபர் 24ந்தேதியன்று இந்தக்கோர்ட்டாரால் ஒரு ரிட் மனுவின்பேரில் அளிக்கப்பட்ட தீர்ப்பைப்பற்றியதாகும்.

அட்வகேட்—ஜெனரல் அளித்திருக்கும் பிரமாணத்தில், முதல் எதிர் மனுதாரரின் பேச்சும், அதைக் கட்டுரையாக இரண்டாது எதிர்மனுதாரர் வெளியிட்டதும்

கோர்ட்டின் கவுரவத்தைப் பாதிக்கக்கூடியதாக இருப்பதாகவும், நீதியின் போக்கைப்பாதிக்கும் நோக்கத்துடன் இருப்பதாகவும், இந்தக்கோர்ட்டின் நீதிநிர்வாகத்துக்கு கெட்டபெயர் உண்டாக்கும் நோக்கத்துடன் இருப்பதாகவும், அதனால் இது கோர்ட்டை அவமதிப்பதாகும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அட்வகேட் ஜெனரல் எதிர்மனுதாரரின் பேச்சின் சிலபகுதிகளை நீதிபதிகளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார். அதில் ஒரே ஒருபகுதி மட்டும் இங்கு போதுமானது.

"..... இரண்டு அய்யங்கார் நீதிபதிகள் ஒரு தமிழரான கலெக்டரைப்பற்றி எல்லைமீறிய கடுஞ் சொற்களை டங்கிய தீர்ப்பை வெளியிட்டிருக்கின்றனர் என்றும்; ..... இது ஆரியர்—தமிழர் உணர்ச்சியை அடிப்படையாகக்கொண்டதே தவிர, நீதியையோ, சட்டத்தையோ, அடிப்படையாகச்கொண்ட பிரச்னையல்லவென்றும் சுமார் ஒன்றரைமணிநேரம் விளக்கிக்காட்டிப் பேசிய தலைவர் பெரியார் அவர்கள், இந்தியாவிலேயே (ஏன் உலகிலேயே) எந்தத் தலைவரும் சொல்லத் துணியாத ஒரு உண்மையைச் சொல்லியிருக்கிறார்....."

மேலும், வழக்கின் நியாயத் தன்மையைக் குறித்தோ, வழக்கின விவரங்களைக் குறித்தோ நீதிபதிகளின் தீர்ப்பு அமையவில்லை என்றகருத்து கீழ்க்கண்ட பகுதியில் தெளிவாக்கப்படுகிறது "...தமிழர் — தமிழர் கலாசாரம்; தமிழர் உரிமை; தமிழர் உத்யோகஸ்தர்— ஆகியவர்களின் வழக்குகளைப்பற்றி இனி ஆரிய நீதிபதிகள் விசாரணை செய்தல் கூடாது என்ற முடிவு ஏற்பட வேண்டுமென்று அழுத்தந் திருத்தமாகக் கூறினார்..."

எதிர் மனுதாரர் ஸ்டேட்மெண்டுகள்

சம்மன் கிடைத்ததும் 2 எதிர் மனுதாரர்களும் கோர்ட்டில் ஆஜராகி தங்கள் ஸ்டேட்மெண்டுகளைத் தருவதற்கு அவகாசம் கேட்டனர். அதன்படியே அவகாசம் தரப்பட்டு இன்று இருவரும் ஆஜராகி ஸ்டேட்மெண்டுகளைத் தந்துள்ளனர். முதல் எதிர் மனுதாரர் ஒரு நீளமான ஸ்டேட்மெண்டை தந்திருக்கிறார்.

இரண்டாவது எதிர்மனுதாரரும் கிட்டத்தட்ட அதே ஸ்டேட்மெண்டை பயன்படுத்தியிருக்கிறார். முதல் எதிர் மனுதாரர் கோர்ட்டில் தமது ஸ்டேட்மெண்ட் மூழுவதையும் படித்தார். ஆனால் மேலும் வழக்காட அவர் விரும்பவில்லை.

ஸ்டேட்மெண்டைக் குறித்து விவரமாகக் குறிப்பிட வேண்டிய அவசியமில்லையென்று கருதுகிறோம். ஸ்டேட்மெண்டில் ஜனரல் குறிப்பிட்டுள்ள கூற்றுக்களைத் தவிர சொல்லவில்லையென்று அவர் மறுக்கவில்லை. அவர் அந்தக் கூற்றுக்களை மெய்ப்பிக்க முயற்சிக்கிறார். நீதிபதிகளை நேரிடையாகத் தமக்குத் தெரியாதென்றும் அவர்கள்மீது தனிப்பட்ட வெறுப்போ காழ்ப்போ தமக்கில்லையென்று சொல்கிறார். ஆனால் குறிப்பிட்ட ஒரு வகுப்பை, அதாவது பார்ப்பன வகுப்பைச் சார்ந்த நீதிபதி, வேறு ஒரு வகுப்பைச் சார்ந்தவர்—அவரது கருத்துப்படி தாழ்ந்த வகுப்பைச் சார்ந்தவருடைய—வழக்கை குறித்த வழக்கில் தீர்ப்புவழங்கும்போது அவரால் சரியான நீதி வழங்க இயலாது என்ற கருத்தைக் கொண்டிருக்கிறார்.

'கோர்ட்டை அவமதிப்பதல்ல' என்ற தலைப்பும் முதல் எதிர் மனுதாரரின் ஸ்டேட்மெண்டின் பல பகுதிகளும், அவர் தமது பேச்சால், ஸ்டேட்மெண்டால், இக்

கோர்ட்டின் ஒரு தீர்ப்பை விமர்சிக்கிறார் என்ற எண்ணத்தைத் தருவதாகவே இருக்கிறது.

முதல் எதிர் மனுதாரருக்கோ, ஜன சமூகத்தில் உள்ள எவருக்குமோ இந்தக் கோர்ட்டின் தீர்ப்பைக் குறித்த சரியான தன்மையை விமரிசனம் செய்யும் உரிமை சந்தேகமின்றி உண்டு. தீர்ப்பின் ஆதாரங்களில் தவறு இருக்கிறது, சட்டம் தவறானது, அல்லது சட்டம் கடுமையாக இருக்கிறது என்றெல்லாம் சுட்டிக்காட்ட உரிமை உண்டு.

ஆனால், எந்தக் கோர்ட்டின் தீர்ப்பும், அதுவும் குறிப்பாக இந்தக் கோர்ட்டின் தீர்ப்பு தவறானது மட்டுமல்ல, விதிரி நீதிபதிகளின் வகுப்புக்கு மாறுட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால் இவ்வாறு நீதி வழங்கப்பட்டது என்று சொல்வதும், சந்தேகத்துக்கிடமின்றி கோர்ட்டை அவமதிப்பதாகும் என்பது நன்கு தெரிகிறது. கோர்ட்டுகளின் கவுரவத்தை நிலைநிறுத்துவதும் பொருட்டும் அதுவும் இந்த ராஜ்பதின் மிகப் பெரிய இந்தக் கோர்ட்டின் கவுரவத்தை நிலைநிறுத்தும் பொருட்டும் நீதிபதிகளின் நேர்மை, நாணயத்தைக் குறித்து பழி சொல்லாமலிருப்பது கட்டாயமாக அவசியமாகிறது. இது நீதிபதிகள் தனியாக மதிக்கப்பட வேண்டும் என்ற உரிமைக்காக அல்ல; ஆனால் நீதிபதிகளின் கவுரவமும், நாணயமும் தாக்கப்படாமலிருக்க வேண்டுமென்பது இந்த நாட்டின் நல் வாழ்வுக்காகவே.

சமுதாய அநீதி ஒழிக்கப்பட வேண்டுமென்றும் அந்த அநீதிக்குரிய காரணங்களை நிறைவேற்றுவதற்காகவே தாம தொண்டாற்றி வருவதாகவும், முதல் எதிர் மனுதாரரின் ஸ்டேட்மெண்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கோர்ட்டின் கவுரவத்தை — அந்தஸ்தை நிலைநாட்டும் கண்ணோட்டத்தோடுதான் அந்த ஸ்டேட்மெண்டை நீதிபதிகள் ஆராய வேண்டியுள்ளது. கோர்ட்டு அவமதிப்பைக்

குறித்த ஒரு நூலுக்கு ஒரு நீதிபதி [உயர் நீதிபதி] முன்னுரையிலுள்ள ஒரு கருத்தை முதல் எதிர்மனுதாரர் தனது ஸ்டேட்மெண்டில் குறிப்பிட்டுள்ளார். தனி ஆத்திரத்தையோ குரோதத்தையோ காட்டவும், சுயநலத்துக்கு பயன்படுத்தவும் கோர்ட்டின் அதிகாரத்தைக் கொண்டு மக்களைத் தண்டிப்பது ஒருபோதும் அனுமதிக்கப்பட்டதில்லையென்ற அந்த முன்னுரையின்பகுதி தவறாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது: அந்த வாசகம்:—

தனியார் ஒருவருக்கொருவர் மீதுள்ள வஞ்சத்தை தீர்த்துக் கொள்வதற்கு செய்யப்படும் முயற்சிகளைக் குறித்ததேதவிர, நீதிபதிகளைக் குறித்ததல்ல. நீதிபதிகளின் தவறுகளும் விடப்படமாட்டா, ஆனால் முன்னுரையில் குறிப்பிடப்பட்ட வாசகம் அந்த எண்ணத்தில் அமைந்ததல்ல.

ஆனால் ஸ்டேட்மெண்டில் கையாளப்பட்டுள்ள வேறு ஒருவாசகத்தை வலியுறுத்துகிறோம். அதாவது கோர்ட் அவமதிப்பு நடவடிக்கை நீதிபதிகளின் தனிப்பட்ட கவுரவத்தை நிலைநாட்டவோ தனியாரை தாக்குதல்களின்றும் அவர்களைக் காப்பாற்றவோ மேற் கொள்ளப்படுவதற்கல்ல ஆனால் கோர்ட்டுகளின் கவுரவத்தை நிலைநாட்டுவதற்கும் நீதியின் போக்கைத்தடுக்கக்கூடிய செயல்களை விலக்கவும் தான்.

எதிர்மனுதாரர்களின் செயலுக்காக அவர்களை நாம் தண்டித்தால் அது குறிப்பிட்ட நீதிபதிகளின் கவுரவம் பாதிக்கப்பட்டதென்பதற்காகவோ அல்லது அந்த தண்டனை குறிப்பிட்ட நீதிபதிகளை அவமானத்தினின்றும் காப்பதற்காகவோ அல்ல. கோர்ட்டின் தீர்ப்பு தவறான நோக்கத்தின் மீது அமைந்தது என்று சொல்வது குறிப்பிட்ட நீதிபதியின்மீது தாக்குதல் என்பதைக்காட்டிலும்,

திரிகைகூட இச்சங்கதியில் இவ்வளவு மோசமாக நடந்து கொள்ளும் என்று நாம் நினைக்கவில்லை.

இச்சமயத்தில் ஒரு உண்மையை எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறோம். தலைவர் பெரியார் அவர்கள் பத்திரிகை விளம்பரத்தை நம்பி உயிர்வாழவில்லை ; தம் இயக்கத்தையும் நடத்தவில்லை. அவர் பொது வாழ்வில் ஈடுபட்ட நாள் முதல் இன்று வரையில் எல்லாப் பத்திரிகைகளும் கட்டுப்பாடாக அவரை இருட்டடித்தும் அவரது கொள்கைகளைத் திரித்துக் கூறியும்தான் வந்திருக்கின்றன. என்றாலும் எதிர்ச்சுக்தியு தமிழ்நாடு முழுதும் தம் கொள்கையைப் பரப்பிக்கொண்டு வருகிறார். பதினாயிரக்கணக்கான மக்கள் முன்பு நாள்தவறாமல் பேசிப்பிரசாரம் செய்வது காரணமாகவும், உணர்ச்சி சக்தியின் காரணமாகவுமே பெரியார் அவர்கள் உயிர்வாழ்ந்து வருகிறார். வகுப்பு உணர்ச்சியுள்ள, சுயநலத்துக்காகவே பத்திரிகை நடத்துகின்றபத்திரிகைமுதலாளிகளைநம்பியோ, அவர்களை மரியாதை செய்வதன்மூலம் ஏதாவது சொந்தப்பலன் அடையலாமென்று கருதியோ பெரியார் அவர்கள் உயிர்வாழவில்லை. ஆதலால் பெரியார் "ஸ்டேட் மெண்டை' இருட்டடித்த பத்திரிகை உலகத்தின் நடத்தையைக் கண்டு நாம் வியப்படையவில்லை.

தமிழ்நாட்டின் முதல்தரமான இழிவு என ஒன்றை எடுத்துக் காட்ட வேண்டுமானால் இந்த யோக்கியமான ஒரு பத்திரிகை — செய்தித்தாள் — இல்லை என்பதுதான்.

இனி நேற்றைய தீர்ப்பைப்பற்றி கவனிப்போம்.

திருச்சிப் பொதுக் கூட்டத்தில் 4-11-56'ல் பேசிய பேச்சின் கருத்தைப் பெரியார் அவர்கள் மறுக்கவில்லை. அதைவிட ஆணித்தரமாகவே தம் 'ஸ்டேட்மெண்'டில் கூறியிருக்கிறார். தாம் இப்பிரச்னையில் உண்மையாக நினைப்பதை ஒளிவு மறைவு இல்லாமல் எடுத்துக்கூறி யிருக்கிறார். நீதிமன்றத் தீர்ப்பை விமர்சனம் (criticise) செய்வது குற்றமல்ல என்று கனம் நீதிபதிகள் அய்யமறக் கூறிவிட்டனர்.

ஹைகோர்ட் தீர்ப்பு என்றால், அது தீண்டத் தகா தது; பேசத் தகாதது என்ற புனிதத் தன்மை இருந்ததைப் பொய்யாக்கி, கனம் நீதிபதிகள் வாயினாலேயே எவருக் கும் " விமர்சன உரிமை உண்டு " என்று ஒப்புக் கொள்ளச் செய்தமைக்காக மகிழ்ச்சியடைகிறோம். இது இந்தியா முழுமைக்கும் பயன்படக்கூடிய தீர்ப்பாகும். ஒரு வகையில் " டெஸ்ட் கேஸ் " என்றும் கூறப்படுவதாகும்.

ஆனால் இதில் ஒரு புதுச்சிக்கல் ஏற்பட்டிருக் கிறது: நாட்டில் ஜாதி உணர்ச்சி வேரூன்றிக்கிடக்கிறது. அதுவும் பார்ப்பனரிடையே இந்த உணர்ச்சி பூத்துக் காய்த்துப் பழுத்துக் குலுங்கிக் கொண்டிருக்கிறது. நீதிபதிகள் மட்டும் இந்த உணர்ச்சிக்கு விலக்காயிருக்க முடியுமா? இப்படிக்கூறுவது சட்டப்படி குற்றமாக வும், "கோர்ட் அவமதிப்பாகவும்" கருதப்படலாம்.

ஆனால் இதற்குப்பரிகாரம் தேடுவது எப்படி? சிளர்ச்சி செய்வது எப்படி? "நீதிபதிகளுக்கும் மற்றவர்களைப் போலவே ஜாதிஉணர்ச்சி இருக்கிறது," என்று கூறுவதனால் நீதிக்குப்பாதகம் ஏற்படாதே? ஒரு நீதிபதி கருப்பாயிருக்கிறார். அல்லது குள்ளமாயிருக்கிறார் என்பது எப்படி உண்மையோ. இதைக்கூறுவது எப்படித்தவறில்லையோ, அதுபோலத்தான் நீதிபதி பார்ப்பான் என்று கூறுவதும் ஆகும். இது எப்படிக் குற்றமாகும்?

உள் எண்ணம் [motive] கற்பிக்காமல் எந்தத் தீர்ப்பையும் கண்டித்துக்கூற — விமரிசனம் செய்ய — எல்லோருக்கும் உரிமையுண்டு என்று இத்தீர்ப்பின் மூலம் மீண்டும் உறுதியாக்கப்பட்டிருப்பதுமாதிரி, நீதிபதிகளின் ஜாதி உணர்ச்சியைப்பற்றிக் கூறவும் உரிமையிருக்க வேண்டாமா? இன்று இது சட்டப்படி தப்பாக இருக்குமானால், சட்டத்தைத் திருத்தவேண்டும்; அல்லது அதற்கான கிளர்சசி நடக்கவேண்டும்.

"வாயில்— நாக்கில். — குற்றம் இருந்தாலொழிய வேம்பு இனிக்காது; தேன் கசக்காது பிறவியில் மாறுதல் இருந்தாலொழிய புலி புல்லைத் தின்னாது ; ஆடு மனிதனைத் தின்னாது ; அது போலத்தான் பார்ப்பனர்களின் தன்மையும்,

என்று தலைவர் பெரியார் அவர்கள் தமது "ஸ்டேட்மெண்ட்"டில் எடுத்துக்காட்டியிருப்பதை எந்த நீதிபதியும் மறுக்க முடியாது.

ஆகவே இந்தத் துறையில் கிளர்ச்சி அவசியமாகி விட்டது. இப்பேர்ப்பட்ட வாய்ப்பு மீண்டும் ஏற்படுமானால் அதன் விளைவுக்குத் தயாராயிருக்க வேண்டியதுதான். அப்போதுதான் இப்பிரச்னையில் முடிவான நன்மையைக் காணமுடியும்.

குறிப்பாகக் கூறவேண்டுமானால், திராவிடர்களைக் "கீழ்சாதி"யாக நினைப்பவன், அதாவது தன் முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் திராவிடர்கள் இடையூறாக இருப்பதாக நினைப்பவன், எவனாயிருப்பினும் தமிழர்களுக்கு நீதிபதியாக இருக்கக்கூடாதுதான் இதற்காகவே ஒரு தனிக் கிளர்ச்சி செய்து தீரவேண்டும்.

விரைவில் இதே உயர்நீதிமன்றத்தில், 4—5 நீதிபதிகளின் இடம் காலியாகப்போகிறது. அடுத்த 5—6 ஆண்டுகளுக்குப் பிறகு கனம் உயர்திரு. பி. வி. ராஜமன்னார் தலைமை நீதிபதி—யவர்களோ கிட்டயராகப் போகிறார். இப்போதே 9 பேர்களில் 5 பேர் பார்ப்பனர். அடுத்த காலியிடத்தில் ஒரு பார்ப்பனரே நியமிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. அப்போது 6 பேர் பார்ப்பனராகவும் 3 பேர் தமிழராகவும் இருப்பர்.

அடுத்தபடி நியமிக்கப்படவிருக்கும் நீதிபதிதான் 5 ஆண்டுகளுக்குப்பிறகு பிரதம நீதிபதியாக வரக்கூடும் என்றும் கூறப்படுகிறது. இதைத் திராவிட மக்கள் எப்படிச் சகித்துக்கொண்டிருக்க முடியும்? இம்மாதிரி

யெல்லாம் பேசுவதும் எழுதுவதும் தப்பு என்றால்— இவைகளை எல்லா வீடுகளும் இருட்டடிப்புச் செய்வ தென்றால் இடைவிடாத கிளர்ச்சிகளைத் தவிர வேறு வழியிருந்தால் யாராவது கூறட்டுமே!

உரிமை கேட்பது சட்டப்படி குற்றமென்றால் அதற்குத் தகுந்தவிலை கொடுத்துத்தானேதீரவேண்டும்?

ஆதால் திராவிடர் உரிமைக் கிளர்ச்சிகள் எல்லாத் துறைகளிலும் நடந்தாக வேண்டும். தலைவர் அவர்கள் சிறைத்தண்டனை பெறாதபடியரல் இக்கிளர்ச்சிகளை இனி அவர்களே தலைமைதாங்கி நடத்துவார்கள் இன உணர்ச்சிகொண்ட எல்லாத் தமிழர்களும் தயாராயிருக்கு மாறு வேண்டிக்கொள்கிறோம்.

திராவிடன் பிரஸ், சென்னை-2.